விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 29 புதன்கிழமை (15.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 361

# ஜனாதிபதிக்கு எதிரான ஆர்ப்பாட்டம்

# பிரிட்டன் அரசு எதுவும் செய்ய முடியாது

## உயர்ஸ்தானிகராலயம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிரித்தானிய விஜயத்தின் போது அவரின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குள்ளானது என்ற கேள்வி எழவில்லை. பிரித்தானியப் பொலிஸார் தகுந்த பாதுகாப்பு வழங்கியிருந்தனர் எனப் பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. அத்துடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான தமிழ் மக்களின் ஆர்ப்பாட்டம் தொடர்பில் பிரித்தானிய அரசு எந்தவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாதெனவும் உயர்ஸ்தானிகராலயம் சுட்டிக்காட்டியுள்ளது. *(16ஆம் பக்கம் பார்க்க)*

## வன்னி இறுதிக்கட்டப் போரில் ஈடுபட்ட 1000 படைவீரர்களுக்கு பதக்கம்

### அலரிமாளிகையில் வைபவம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நடைபெற்ற இறுதிக்கட்ட போரில் திறமையாகச் செயற்பட்ட இலங்கை முப்படைகளையும் சேர்ந்த 1000 வீரர்கள் நேற்று அலரிமாளிகையில் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு கிழக்கு யுத்தத்தின்போது காத்திரமான முறையில் பங்களிப்பு வழங்கிய படைவீரர்கள் மற்றும் உயரதிகாரிகளுக்கு இவ்வாறு பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதமர் டி.எம். ஜயரட்ண, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா *(16ஆம் பக்கம் பார்க்க)*

## விக்கிலீக்ஸ் இயக்குநர் பிணையில் விடுதலை



(லண்டன்)

பாலியல் குற்றச்சாட்டு காரணமாக கைது செய்யப்பட்ட விக்கி லீக்ஸ் இணையத்தள இயக்குநர் ஜூலியன் அசேஞ்சுக்கு பிரித்தானிய நீதிமன்றம் ஒன்று நேற்றுப் பிணையில் செல்ல அனுமதி *(16ஆம் பக்கம் பார்க்க)*

## விடுதலைப் புலிகளின் கோடிக்கணக்கான சொத்துக்களை முடக்க ஐ.எம்.எப் மும்முரம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் சொத்துக்களை முடக்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் முயற்சித்து வருகிறது.

உலகின் பல நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சொத்துக்கள் காணப்படுவதாகவும் அந்தச் சொத்துக்களைச் சுவீகரித்துக் கொள்ள இலங்கை அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

இந்நிலையில் ஐக்கிய நாடுகளின் பிரகடனங்களுக்கு அமைவாக விடுதலைப் புலிகளின் சொத்துக்களை முடக்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் ஒத்துழைப்பு வழங்கவுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையின் 1267ம் மற்றும் 1373ம் பிரகடனங்களின்படி சொத்துக்களை சுவீகரிப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் உதவிகளை வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பிரகடனங்களை அமுல்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் எதிர்நோக்கக்கூடிய சிக்கல்களுக்கு சர்வதேச நாணய நிதியம் தீர்வுகளை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. *(16ஆம் பக்கம் பார்க்க)*

## அரசியல் தீர்வு தொடர்பான உப குழுவிற்கு தமிழ் கூட்டமைப்பு சார்பில் மூவர் நியமனம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்திற்கும் இடையில் காணப்பட்ட இணக்கப்பாட்டிற்கு அமைய, அமையவுள்ள உப குழு உறுப்பினர்கள் மூவரின் பெயர்களைக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ளது.

மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நியமிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு 9 கட்சிகளின் கூட்டமைப்பான தமிழ்க் கட்சிகளின் அரங்கத்துடன் இணைந்து செயற்படத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்திருந்தது.

இது தொடர்பாகக் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பில் இணக்கம் காணப்பட்டதற்கு அமையவே *(16ஆம் பக்கம் பார்க்க)*

## வன்னி கல்வி வலய பாடசாலைகளுக்கு மேலும் 500 ஆசிரியர்களை இடமாற்ற வேண்டியுள்ளது!

(திருகோணமலை)

வன்னி கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் 500 ஆசிரியர்கள் யாழ்ப்பாணம், வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கு இடமாற்றம் கோரி விண்ணப்பித்துள்ளதாக வடக்கு மாகாண கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்திற்குட்பட்ட மாவட்டங்களுக்கிடையிலான 2010ஆம் ஆண்டிற்கான ஆசிரிய இடமாற்றம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் வழங்கப்பட்டுள்ளது.

இவ் இடமாற்றத்திற்கான ஆசிரியர்கள் விபரங்களையும் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் *(16ஆம் பக்கம் பார்க்க)*

மாபெரும் மலிவு விற்பனை
18.12.2010 சனிக்கிழமை –
24.12.2010 வரை
Special Offer!
அனைத்துப் பொருட்களும் உத்தரவாதத்துடன்
சுந்தர்சன்
மானிப்பாய்
30%
வரையான விலைக்கழிவில்
(C-1827)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



கார்கில்ஸ் பூட் சிற்றியின் (Cargils Food City ) 150 ஆவது கிளை நேற்று மானிப்பாயில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கார்கில்ஸ் பூட் சிற்றியின் நிர்வாக இயக்குநரும் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரியுமான இம்தியாஸ் வாகிட், 51 ஆவது படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் ஜானக வல்கம ஆகியோர் நாடாவெட்டி கிளையை திறந்து வைப்பதையும் நிறுவனத்தின் அதிகாரி மங்கல விளக்கேற்றுவதனையும் விருந்தினர்கள் பொருட்களை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# ஈழப் போராட்டம் முடியவில்லை அறிவாயுதம் ஏந்தித் தொடருவோம்

## நாம் தமிழர் இயக்கத் தலைவர் சீமான்

வரும் சட்டமன்றத் தேர்தலிலும் இலங்கைப் பிரச்சினை நிச்சயம் எதிரொலிக்கும் என நாம் தமிழர் இயக்கத்தின் தலைவர் சீமான் கூறியுள்ளார். இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

நாம்தமிழர் இயக்கம் மக்கள் இயக்கமாக மாறிவருகிறது. தி.மு.க, அ.தி.மு.க வுக்கு மாற்றாக இந்த இயக்கத்தை மக்கள் மன்றத்தில் கொண்டு செல்ல வேண்டும் என்பது தான் எங்களது இலக்கு.

பதவி சுகத்துக்காக இந்த இயக்கம் தொடங்கப்படவில்லை. தமிழ் இனம் நிம்மதியாக வாழவும் ஊழலற்ற சமுதாயத்தை உருவாக்கவும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். எங்கள் பின்னால் இளைஞர்கள் திரண்டு வந்துகொண்டிருக்கிறார்கள்.

ஈழப் போராட்டம் முடிந்துவிடவில்லை. அறிவாயுதம் ஏந்தி தொடர்ந்து போராடுவோம். 60 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் இன விடுதலை போராட்டத்தை தமிழ் மக்களிடம் உரிய முறையில் கொண்டு சேர்க்க வேண்டியது ஒவ்வொரு தமிழனின் கடமையாகும். கடந்த பாராளுமன்ற தேர்தலில் மாணவர்கள், வக்கீல்கள் எழுச்சியுடன் போராட்டக் களத்தில் நின்றனர்.

ஆனால் இது மாதிரி போராட்டங்கள் முடக்கி போடப்பட்டன. காங்கிரஸ் எதிர்ப்பு என்பது எங்களது கொள்கை முடிவு. கடந்த தேர்தலில் ஏற்பட்ட எதிர்ப்பு அலையால் தான் காங்கிரஸ் 7 இடங்களில் தோற்றது. வருகிற சட்டமன்ற தேர்தலிலும் இலங்கை பிரச்சினை நிச்சயம் எதிரொலிக்கும். இலங்கை தமிழர் பிரச்சினையை தமிழ் மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டிய கடமையில் இருந்து நாங்கள் ஒருபோதும் தவறமாட்டோம் என்றார். (ந-5)

# புத்தளத்தில் வசித்த முஸ்லிம்கள் மீள் குடியேற யாழ். வருகை

யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்த நிலையில் புத்தளத்தில் வசித்துவந்த முஸ்லிம் மக்களின் ஒரு தொகுதியினர் மீள் குடியேற்றத்திற்காக தங்களது சொந்த இடங்களை நோக்கி நேற்றுக் காலை புத்தளத்திலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கி பயணமாயினர்.

வளமான ஸ்ரீலங்காவை கட்டியெழுப்புவோம் என்ற அமைப்பினால் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிலையில் இம்மக்கள் குடா நாட்டுக்கான தங்களது பயணத்தை ஆரம்பித்தனர்.

இதன் முதற்கட்டமாக 150 குடும்பங்களின் தலைவர்கள் மீள் குடியேற்றத்திற்கான பயணத்தை ஆரம்பித்துள்ள நிலையில் அவர்களது குடும்பத்தினர் சில தினங்களின் பின்னர் யாழ்ப்பாணத்தை நோக்கிப் பயணிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முதற்கட்டப் பயணக் குழுவில் யாழ் மாநகரசபையின் முன்னாள் பிரதி மேயர் எம்.ஜீ.பஷீரும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)


செல்லா சினிமா [காதன்ஸ்]
03.12.2010 முதல்
ஆர்யா, ஸ்ரேயா, சந்தானம் நடித்த




காட்சி நேரம்:- 10.30,2.30,6.30,9.30



**வேலையாட்கள் தேவை**

பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை.
கூடிய சம்பளம் வழங்கப்படும். (3249)

**அல்பா மிக்ஷர்**
உடுவில் றோட், மானிப்பாய்.
0212255278



**மணமகள் தேவை**

வயது 31 BSc. Computer Science படித்து அரச நிறுவனத்தில் பணி புரியும் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு A/L படித்த மணமகள் தேவை
தொடர்புக்கு : 0712924878 (3244)


# வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர் மீள்கேள்வி அறிவித்தல் - 2011

கீழ்க் குறிப்பிடப்படும் சந்தை, இறைச்சிக் கடைகளினை 2011 ம் ஆண்டிற்கு (01.01.2011 – 31.12.2011) குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.
கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி : 15.12.2010 – 22.12.2010 நண்பகல் 12.00 மணிவரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 22.12.2010 பி.ப 1.00 மணிவரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 22.12.2010 பி.ப 2.00 மணி
(கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் போது கேள்விதாரரும் சமுகமளிக்கலாம்)

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "செயலாளர், வலி.கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம் புத்தூர்" எனும் முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்." எனும் முகவரிக்கும் எதிர்வரும் 22.12.2010 பிற்பகல் 1.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| இல விபரம் | கேள்விப் பத்திர பணம் (வற் நீங்கலாக) | மீளளிக்கப்படக் கூடிய வைப்புப்பணம் | ஆகக் குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|
| **அச்சுவேலி உப அலுவலகம்** | | | |
| 01.பொதுச்சந்தை | 250.00 | 500.00 | 3000000.00 |
| 02.அச்சுவேலி மாட்டிறைச்சிக் கடை | 250.00 | 500.00 | 267000.00 |
| **புத்தூர் உப அலுவலகம்** | | | |
| 01.ஆவரங்கால் பொதுச்சந்தை | 100.00 | 250.00 | 15675.00 |
| **நீர்வேலி உப அலுவலகம்** | | | |
| 01.நீர்வேலி ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 9000.00 |
| 02.நீர்வேலி பொதுச்சந்தை | 100.00 | 250.00 | 8100.00 |
| 03.நீர்வேலி மீன்சந்தை | 100.00 | 250.00 | 4500.00 |
| **கோப்பாய் உப அலுவலகம்** | | | |
| 01.கோப்பாய் வடக்கு பொதுச்சந்தை | 200.00 | 500.00 | 13500,00 |
| 02.கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 2700.00 |
| **உரும்பிராய் உப அலுவலகம்** | | | |
| 01.உரும்பிராய் மத்திய சந்தை | 500.00 | 2000.00 | 31600.00 |

குறிப்பு

01. சந்தையிலிருந்து 01 கி.மீ சுற்றாடலில் மீன், மரக்கறி விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது.

02. கேள்விப் பத்திரங்களைப் பெற விரும்புவர்கள் தத்தமது பிரதேச கிராம சேவையாளர்களின் வதிவிடச் சான்றிதழ் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் உப அலுவலகத்திற்கு சமுகமளிக்க வேண்டும்.

03. கேள்விப்பத்திரப் பணம், சித்திபெற்ற கேள்வித்தொகை என்பவற்றிற்கு ஒப்பந்தம் எழுதும்போது உள்ளபடி வற்வரி செலுத்துதல் வேண்டும்.

04. இறைச்சிக் கடைக்கு விண்ணப்பப் படிவங்கள் பெறுபவர்கள் தங்களது முன் அனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும் முன்பு கடை நடாத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லையென உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.

**வலி.கிழக்கு பிரதேச சபை**
**தலைமை அலுவலகம்**
**புத்தூர்.**
**14.12.2010**

**தம்பையா நடராசா**
**செயலாளர்**

(சி-8226)

## பிரதேச செயலகம் - தீவுப்பகுதி தெற்கு, வேலணை.

### விசேட மகாசபைக் கூட்ட அறிவித்தல்

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம்**

மேற்படி நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கான விசேட மகா சபைக் கூட்டத்தினை கூட்டுமாறு ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றின் கௌரவ நீதிபதியவர்கள் என்னைப் பணித்துள்ளார்.

இதற்கமைவாக, மேற்படி கூட்டம் நீதிமன்றம் தீர்மானித்த தினமாகிய 19.12.2010 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் அறங்காவலர் சபை மண்டபத்தில் எனது தலைமையில் நடைபெறும். இவ் அறிவித்தலை தனிப்பட்ட அறிவித்தலாக அனைத்து வழிபடுநர் சபை அங்கத்தவர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

மேற்படி கூட்டத்தில் அறங்காவலர் சபைத் தேர்தலில் பங்கு பற்றி தேர்தலில் ஈடுபட உரித்துடையவர்கள் தொடர்பான பிரேரணைகள் மட்டும் முன்வைக்கப்படும்.

எனவே, மேற்படி மகாசபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு 2004 ஆம் ஆண்டில் தகுதியானவர்கள் உட்பட, 2010 ஆம் ஆண்டுவரையும் சந்தாப் பணத்தினைச் செலுத்தியவர்கள் கலந்துகொண்டு மேற்படி விடயமான பந்தி 03 இல் குறிப்பிட்ட பிரேரணை தொடர்பான தங்கள் கருத்துக்களை வழங்க முடியும்.

திகதி : 2010.12.14

மு.நந்தகோபாலன்,
பிரதேச செயலர்,
தீவகம் தெற்கு,
வேலணை.

(சி-1829)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## பக்தி

ஒரு அரசன்காட்டுக்குச் சென்றான். அங்கே ஒரு முனிவரைப் பார்த்தான். அவருக்கு ஏதாவது கொடுத்துவிட்டு வரவேண்டுமென்று ஆசைப்பட்டான்.

"சுவாமி, என்னிடமிருந்து நீங்கள் எதையாவது ஏற்றுக் கொள்ள வேண்டும்'' என்று வேண்டிக்கொண்டான். அந்த முனிவர் இந்த ராஜாவை நிமிர்ந்து பார்த்தார்.

''எனக்கு உன்னிடமிருந்து பெறவேண்டியது ஒன்றுமில்லை. எனக்கு என்ன தேவையோ அதெல்லாம் இங்கேயே கிடைக்கிறது. என்னுடைய பசிக்கு உணவு தேவை. இதோ மரங்களெல்லாம் பழுங்கள் கொடுக்கிறது.

என் தாகத்திற்குத் தண்ணீர் தேவை. அதை இந்த ஆறுகள் கொடுக்கின்றன.

இந்த மரங்கள் கொடுக்கும் பட்டைகளை நான் ஆடையாக உடுத்திக்கொள்கிறேன். இந்த மரநிழல்களில் நான் தங்குகிறேன். மழைவந்து விட்டால் குகைகளுக்குள் போய்விடுவேன். அப்படியிருக்கும்போது உன்னிடமிருந்து நான் வாங்குவதற்கு என்ன இருக்கிறது?''என்றார் முனிவர்.

ராஜா விடவில்லை. "இருந்தாலும் நீங்கள் என்னுடைய அரண்மனைக்கு வரவேண்டும். அங்கே வந்து ஏதாவது வாங்கிக் கொண்டுதான் போகவேண்டும்'' என்று பிடிவாதமாக நின்றார்.

அவரும் வேறுவழியில்லாமல் 'சரி'யென்று சொல்லிவிட்டு அரசனுடன் புறப்பட்டார். அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்.

அரண்மனையில் அவரை ஒரு பக்கமாக உட்கார வைத்துவிட்டு, அந்த அரசன் பூஜை அறைக்குள் போனான். அங்கேயிருந்த சுவாமி படங்களுக்கு முன்னால் நின்று,

"பகவானே, எனக்குக் குழந்தை இல்லை. ஒரு குழந்தையைக் கொடு. எனக்கு இருக்கும் செல்வம் போதவில்லை. அதனால் இன்னும் செல்வத்தைக் கொடு. இப்பொழுது இருக்கும் ராஜ்ஜியமும் எனக்குப் போதாது. இதை இன்னமும் பெரிதாக்கு'' என்று வேண்டிக் கொண்டான்.

முனிவர் உடனே அந்த அரண்மனையை விட்டுப் புறப்பட்டு காட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

அரசன் இதைக்கவனித்து விட்டு அவருக்குப் பின்னால் ஓடி வந்தான்.

"என்ன இது? ஒன்றும் வாங்கிக் கொள்ளாமல் புறப்பட்டு விட்டீர்களே'' என்றான்.

அதற்கு முனிவர்,''பிச்சைக்காரனிடமே பிச்சை வாங்கலாமா?'' என்றாராம்.

"யாரைச் சொல்றீங்க?'' என்று கேட்டிருக்கிறான் அரசன்.

"உன்னைத்தான் சொல்கிறேன். இப்பொழுது பகவானிடம் நீ பிச்சை தானே கேட்டுக் கொண்டிருந்தாய்'' என்றார் முனிவர்.

சுவாமி விவேகானந்தர் இந்தக் கதையைச் சொல்லியிருக்கிறார். எதற்காக இந்தக் கதையைச் சொல்லியிருக்கிறார்? அதையும் அவரே விபரமாக சொல்கிறார்.

''கடவுளிடம் அன்பு காட்டுவது என்பது வேறு. அவரிடம் பிச்சை கேட்பது என்பது வேறு. அவர் மீதுள்ள அன்பு காரணமாக அவரை வணங்க வேண்டும்.

ஒரு அழகான இயற்கை காட்சியைப் பார்க்கிறீர்கள். உடனே அதன் மேல் ஒரு காதல் பிறக்கிறது. உடனே அந்தக் காட்சியிட மிருந்து நீங்கள் எதையாவது எதிர்பார்க்கிறீர்களா? அல்லது அதுதான் உங்களிடமிருந்து ஏதாவது எதிர்பார்க்கிறதா?

அது மாதிரி தான் கடவுளையும் நாம் நேசிக்க வேண்டுமாம். நம்மால் அவரை நேசிக்காமல் இருக்க முடியாது என்ற நிலை வரவேண்டுமாம். அதற்குத் தான் பக்தி என்று பெயர்'' என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

ஆனால் இப்பொழுது உள்ள பல பக்திமான்கள் அப்படியா இருக்கிறார்கள்? எனக்கு அதைக் கொடு – இதைக் கொடு என்று கடவுள் சந்நிதியில் கையேந்திக்கொண்டு தானே நிற்கிறார்கள்.

கடவுள் ஒரு தடவை பூமிக்கு வந்து தன்னுடைய பக்தன் ஒருத்தனின் மனம் நிறைய ஏதாவது கொடுத்துவிட்டுப் போக வேண்டும் என்று நினைத்தார். அதற்காக இங்கே வந்தார்.

பக்தனைப் பார்த்தார்.

'உனக்கு என்னென்ன வேண்டும்?' என்றார். அவன் கேட்டதையெல்லாம் கொடுத்தார்.

அவனுடைய வீட்டிலிருந்த மண்பானையை கடவுள் தன் ஆட்காட்டி விரலால் தொட்டார். அது உடனே தங்கமாகிவிட்டது. அவனுடைய வீட்டிலிருந்த மர நாற்காலியைத் தொட்டார். அதுவும் உடனே தங்கமாகி விட்டது.

அவன் வீட்டையே தொட்டார். அது முழுவதும் தங்கமாகி விட்டது. பக்தனுக்கு ரொம்ப சந்தோஷம்.

கடவுள் பார்த்தார். அவனைப் பக்கத்தில் கூப்பிட்டு "இன்னும் உனக்கு என்ன வேண்டும்? கேள்'' என்றார்.

''இன்னும் ஒன்றே ஒன்றுதான் எனக்குத் தேவை'' என்றான்.

"எது?'' என்று கேட்டார் கடவுள்.

"உங்களுடைய ஆட்காட்டிவிரல்'' என்றான் பக்தன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பஸ்சேவை திடீரென நிறுத்தப்பட்டதால் சிரமத்துக்குள்ளாகி வரும் பயணிகள்

(பூநகரி)

கிளிநொச்சியிலிருந்து காலையும் மாலையும்முக்கொம்பன் பகுதிக்குச் செல்லும் பேருந்து சேவை திடீரென நிறுத்தப்பட்டதால் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களும்வைத்தியசாலைக்குச்செல்லும் நோயாளிகளும் பொது மக்களும் பெரும் சிரமத்தை அனுபவித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இக் கிராமத்திலிருந்து கிளிநொச்சி, பூநகரி செல்வதாக இருந்தால் 10 கிலோமீற்றர்தூரம்நடந்தே பேருந்தில் ஏறிப் பயணத்தை மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளதாக இக்கிராம மக்கள் தெரிவிக் கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் விரைந்து உடன் நடவடிக்கைஎடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-84)

## திருட்டுப் போன மாடு இறைச்சிக்காக வெட்டப்பட்டது

(மாதகல்)

பண்டத்தரிப்பு வடலியடைப்பு பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு இனந்தெரியாதோரால் திருடப்பட்ட 75 ஆயிரம் ரூபா பெறுமதியான எருது மாடொன்று பாடசாலையொன்றுக்கு முன்பாக உள்ள மைதானத்தில் இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளது.

குறித்த மைதானத்தில் மாட்டின் தலை, எலும்புகள் காணப்பட்டதுடன் அவர்கள் பயன்படுத்திய கத்தியையும் அவ்விடத்தில் விட்டுச் சென்றுள்ளனர். (ஸ்ரீ-3-47)

## அதிபர் பதவிக்கான வெற்றிடம்

தரம் III பாடசாலைகளான யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை மற்றும் யா/அச்செழு மெ.மி.த.க.பாடசாலை ஆகியவற்றிற்கான அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண கல்வி வலயத்தைச் சேர்ந்த மாகாணப் பாடசாலைகளில் கடமை புரியும் சேவை நீடிப்பில் இல்லாத இலங்கை அதிபர் தரத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்தும் ஆசிரியர் சேவை வகுப்பு I மற்றும் 2- I ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் இவ்விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் மட்டுமே ஆசிரியர் தரத்தைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

விண்ணப்பப்படிவங்களை ஆசிரிய நிர்வாகக் கிளையில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்குமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஸ்ரீ-3)

## நீர் இறைக்கும் இயந்திரங்கள் கையளிப்பு

(பூநகரி)

பூநகரி நல்லூர் கிராமசேவகர் பிரிவில் உள்ள 515 குடும்பங்களில் இருந்து கிராம பொது அமைப்புக்களின் சிபார்சின்படி தெரிவு செய்யப்பட்ட 300 குடும்பங்களில் முதற்கட்டமாக 138 குடும்பத்தலைவர்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் யு.என்.டி.பி நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

நல்லூர் கிராம சேவை அலுவலர் எஸ்.திருக்கேதீஸ்வரன் ஒழுங்குபடுத்தலில் சாமிப்புலம், நல்லூர், நேரடம்பன், சின்ன பல்லவராயன்கட்டு, யட்டன், முக்கொம்பன் ஆகிய கிராமங்களுக்கு வாழ்வாதார திட்டத்தின் கீழ் கடந்த வாரம் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. (ஸ்ரீ-3-84)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 200 | 110 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 150 |
| தக்காளி | 100 | 120 | 130 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 |
| கோவா | 70 | 80 | 80 |
| கரட் | 80 | 100 | 90 |
| பூசணி | 50 | 50 | 40 |
| புடோல் | 80 | 120 | 90 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 180 | 180 | 150 |
| பெரிய வெங்காயம் | 150 | 160 | 140 |
| பாகற்காய் | 200 | 240 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 90 |
| கருணைக் கிழங்கு | 50 | 80 | 80 |
| பயற்றங்காய் | 180 | 240 | 250 |
| லீக்ஸ் | 100 | 140 | 180 |
| பீற்றூட் | 90 | 100 | 100 |
| கறிமிளகாய் | 200 | 250 | 250 |
| முருங்கைக்காய் | 250 | -- | 200 |
| போஞ்சி | 140 | 160 | 150 |
| கத்தரிதம்புள்ள | 100 | 200 | 60 |
| கீரை – 1 பிடி | 30 | 40 | 40 |
| தேசிக்காய் | 80 | 120 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 45 |

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலகத்தில் ஊடகவியலாளருக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

இக்கலந்துரையாடலுக்கு யாழ். மாவட்டத்தில் உள்ள செய்திகளை வழங்குகின்ற அனைத்து ஊடகங்களினதும் பிரதிநிதிகளை தவறாது சமுகமளிக்குமாறு யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி.இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## இராசி பலன்

*15.12.2010*
*(கார்த்திகை 29, புதன்கிழமை)*
*நவமி முற்பகல் 10.38 மணிவரை*
*உத்தரட்டாதி முற்பகல்10.05 மணிவரை*
*இராகுகாலம் 12.21-1.51 மணிவரை*
*சுபநேரம் 4.51-6.21 மணிவரை*

**மேடம்** கொடுக்கல்-வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சயன சுகக் குறைவுண்டு, தொழில் முன்னேற்றம் கருதி வெளியூர்ப் பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை அமையும்.

**இடபம்** அஞ்சல் வழியில் அனுகூலமான தகவல்கள் வந்து சேரலாம், ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழி சமைக்கும் நாள், குடும்ப உறவினர் மூலம் உதவிகள் கிடைக்கலாம்.

**மிதுனம்** புதிய தொழில் தொடங்க திட்டம் தீட்டுவீர்கள்,சொத்துக்கள் வாங்கும் திட்டத்தில் முன்னேற்றம் ஏற்படும், அரசு வழி அனுகூலமுண்டு.

**கடகம்** பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணத்தால் பலனுண்டு, உறவினர்களுடன் ஏற்பட்ட முரண்பாடுகள் அகலும், முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

**சிங்கம்** வார்த்தையில் நிதானம் தேவை, சில பிரச்சினைகளை கண்டும், காணாமலும் இருப்பது நல்லது, குடும்பத்தில் சிறு சிறு குழப்பங்கள் தோன்றி மறையும்.

**கன்னி** பழைய நண்பர்களை சந்திக்கும் வாய்ப்புண்டு, விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர், பயணத்தால் பலன் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**துலாம்** எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், உடல் நலம் சீராகி ஆரோக்கியம் பெறுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும், சுவாரஸ்யமான நாள்.

**விருச்சிகம்** இன்பங்கள் இல்லம் தேடி வரலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கும், பிள்ளைகளால் பெருமையடைவீகள், உஷ்ண நிலையுண்டு.

**தனுசு** தொழிலில் எதிர்பார்த்த பலனுண்டு, பெற்றோர் மீது பிரியம் கூடும், திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடக்கும், பிரயாணங்கள் மூலம் சுகம் அனுபவிப்பீர்கள்.

**மகரம்** அதிக பிரயாசையால் வெற்றி காண்பீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பால் பெருமையடைய வேண்டிய நாள், உறவினர்கள் ஒத்தாசையாக இருப்பர்.

**கும்பம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்ச்சிகள் நடைபெறலாம், நன்மைகள் நடைபெறும் நாள், நல்ல நண்பர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**மீனம்** எப்படி நடக்குமென நினைத்த காரியம் நல்லபடியாக நடக்கும், பொருளாதார நலன் கருதி பயணமொன்றை மேற்கொள்வீர்கள், தெய்வ சிந்தை மேலோங்கும் நாள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த.சாதாரணதர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள்

(அல்வாய்)

க.பொ.த.(சா/த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணி யாழ்ப்பாணத்தில் இரண்டு இடங்களில் நடைபெறவுள்ளது.

இதில் வலயம் I இற்கான மதிப்பீட்டுப் பணி யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் வலயம் II இற்கான மதிப்பீட்டுப்பணி யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி தொடக்கம் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி வரை நடைபெறும் என வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேலும் பிரதம பரீட்சகருக்கான அறிவுறுத்தற் கூட்டம் எதிர்வரும் 23,24 ஆம் திகதிகளில் கொழும்பு றோயல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.இதற்கான கடிதங்கள் சகல பிரதம பரீட்சகர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# வீதி விளக்குகள் ஒளிராமையால் மக்கள் பெரும் அசௌகரியம்

(கரவெட்டி)

கரவெட்டி பகுதியில் உள்ள வீதிகளில் இரவு வேளைகளில் மின்குமிழ்கள் ஒளிராமையால் பொதுமக்களும் பயணிகளும் பெரும்சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

கரவெட்டி பகுதியின் முக்கிய சந்திகளான நெல்லியடி, மாலுசந்தி, வதிரிச்சந்தி மற்றும் ஏனைய முக்கிய சந்திகளிலும் மின்குமிழ்கள் இன்மையால் அப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் அப்பிரதேசத்தில் கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றுவரும் நிலையில் மின்விளக்கு இன்மையால் மக்கள் அச்சத்துடன் வாழ வேண்டிய சூழ்நிலை காணப்படுவதாகவும் விபத்துக்களும் அதிகரித்து வருகின்றது என்று அவர்கள் தெரிவித்தனர்.

எனவே உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-24)

## ஸ்ரீ அம்மா பகவான் பாத பூஜை நிகழ்வு

ஸ்ரீ அம்மா பகவான் பாத பூஜை நிகழ்வு எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பக்தர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (ஸ்ரீ-3)

## கணனி மொழிப்பயிற்சி செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த.உயர்தரத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரதான பாடத்திட்டத்தை சார்ந்த இணையத்தள விருத்திக்கான கணனிமொழிப்பயிற்சிச் செயலமர்வு ஒன்றினை மாகாணக்கல்வித்திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது.

இச்செயலமர்வு எதிர்வரும் 27,28,29 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை யாழ்/வேம்படி உயர்கல்லூரி கணனிக்கற்கை நிலையத்தில் நடைபெறும்.

இச்செயலமர்வில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆசிரிய ஆலோசகர்களும் தரம் 13 இல் பிரதான பாடமாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் பங்குகொள்ள முடியுமென வடமாகாண மேலதிகமாகாண கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4-19)

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் குருபூசை

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் குருபூசை எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் யாழ். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா , சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் , யாழ். மாநகர முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் நல்லூர் பிரதேச செயலாளர் பா. செந்தில் நந்தனன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2-9)

## மணியந்தோட்டத்தில் நிலஅளவைப் பணிகள்

(கொழும்புத்துறை)

மணியந்தோட்டத்தில் உள்ள காணிகளை அளந்து எல்லைகள் குறிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகின்றது.

நல்லூர் பிரதேச செயலகத்தால் நில அளவையாளர்களைக் கொண்டு வரைபடத்தின் உதவியுடன் கடந்த 13 ஆம் திகதி தொடக்கம் நில அளவைகள் நடைபெற்று வருகின்றன.

பாழடைந்த பதுங்குகுழிகள் மற்றும் நீர் நிரம்பிய கிடங்கு பகுதிகளிலும் நில அளவைப்பணி நடைபெறுகின்றதை காண முடிகிறது. (ஸ்ரீ-3-51)

## குழந்தை இயேசுவின் வருடாந்த திருவிழா

(யாழ்ப்பாணம்)



யாழ். அருள் ஆச்சிரமத்தில் அமைந்துள்ள குழந்தை இயேசுவின் வருடாந்த திருவிழா கொண்டாடப்படவுள்ளது.

இதற்கமைவாக ஆயத்த வழிபாடுகள் நாளை வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை மாலை 4 மணிக்கு திருச் செபமாலையும் குழந்தை இயேசுவின் நவநாள் சிறப்பு வழிபாடுகளும் நற்கருணை ஆராதனையும் இடம்பெறும். (ஸ்ரீ-2-3)

## பொங்கலை முன்னிட்டு சனி,ஞாயிறு தினங்களில் வர்த்தக நிலையங்கள் திறப்பு

(சாவகச்சேரி)

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட வியாபார நிலையங்களை சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களில் திறந்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஷ் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

## ஒளி விழா நிகழ்வு

(கொழும்புத்துறை)

நல்லூர் பிரதேச செயலகத்தின் வருடாந்த ஒளி விழா நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-51)

## யாழ்.செய்திகள்

## பொதுக்கூட்டமும் நிர்வாக சபை தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவையின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு பேரவை காரியாலயத்தில் ச.சிவகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினராக பிராந்திய ஆணையாளர் ப.சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாகதிருநெல்வேலி மக்கள் வங்கி முகாமையாளர் ஏ.சத்தியமூர்த்தி, இணுவில் தொழில் அதிபர் எஸ். பி. நடராஜா, நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் எஸ். சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-2-9)

## பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(கொழும்புத்துறை)

நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு மேற்படி பிரதேச செயலக மண்டபத்தில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் அழைக்கப்பட்ட சகல திணைக்கள உத்தியோகத்தர்களையும் கலந்து கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-51)

# விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுப்பிரமணியம் பூங்காவில் எலிபன்ட் கவுஸ் நிறுவனத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்டு இணைக்கப்பட்டுள்ள சிறுவர் விளையாட்டு உபகரணங்களை பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு சுப்பிரமணியம் சிறுவர் பூங்காவில் யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோ.பற்குணராஜா, கௌரவ விருந்தினராக எலிபன்ட் கவுஸ் நிறுவன நெயல் சமரசிங்க கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2-9)

# செயலமர்வு

(கொழும்புத்துறை)

சமூக சேவை அமைச்சின் நிதியுதவியுடன் தேசிய திட்டத்திற்கு அமைய சமூக மட்ட மாற்றுவலுவுள்ளோரை முன்னேற்றல் தொடர்பான செயலமர்வு கடந்த 11 ஆம் திகதி தொடக்கம் இன்று வரை நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்று வருகிறது.

நல்லூர் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர், சமூக சேவை உத்தியோகத்தர்களால் நடத்தப்படும் மேற்படி செயலமர்வில் நல்லூர் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த 20 தொண்டர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். (ஸ்ரீ-3-51)





ஆரம்பக்கல்வி, ஆண்டு 1,2 ஆசிரியர்களுக்கான வாய்மொழி மூல ஆங்கில பாடசெயலமர்வு யாழ்.கல்வி வலய கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இச்செயலமர்வில் ஆங்கில ஆசிரிய ஆலோசகர் சி.தயாகரன் செயலமர்வு நடத்துவதனையும், வளவாளர்கள் அமர்ந்து இருப்பதனையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :-என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொதுநூலகத்தில் நடைபெற்ற தேசிய வாசிப்பு மாத பரிசில் வழங்கும் நிகழ்வில் பாடசாலை மாண வர்கள் இறைவணக்கம் செலுத்துவதையும் த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சாவகச்சேரி பிதேச சபையின் சரசாலை உப பணிமனைப் பொறுப்பதிகாரி திருமதி மாலினி மோகனதாஸ், இளைப்பாறிய நூலகர் எஸ்.கணேஸ், சரசாலை பொது நூலகர் இ.தர்மலிங்கம் ஆகியோர் நிற்பதையும் மட்டுவில் கமலாசினி வித்தியாலய மாணவர்களது குருபக்தி நாடகத்தின் ஒரு தோற்றத்தினையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

## பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட தீர்மானம்

அஞ்சல் திணைக்களத்தின் தொழிற்சங் சேவையாளர்கள் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாக எச்சரித்துள்ளனர்.

இந்தத் தகவலை தொழில் சங்க சம் மேளனப்பிரதிநிதி கே.எம்.சிங்தக்க பண்டார வெளியிட்டுள்ளார்.

தமது பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின் இன்று நள்ளிரவு முதல் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபடப்போவ தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2-9)

## பிறப்பில் இருந்து வாய் பேச முடியாத குழந்தையை பேச வைத்து லண்டன் மருத்துவர்கள் சாதனை

பேசுவது சாத்தியமில்லை என்று மருத்து வர்களால் கைவிடப்பட்ட குழந்தைக்கு இப்போது சத்திரசிகிச்சை மூலம் பேச்சு வந்துள்ளது.

லண்டனைச் சேர்ந்த செவினிபெரிடே என்ற குழந்தைக்கு பிறப்பு முதலே வாயிலி ருந்து சத்தம் வெளியேறும் காற்றுக்குழாயில் அடைப்பு ஏற்பட்டது.

ஏனைய குழந்தைகளைப் போல் வாய் விட்டு அழமுடியாது.பிறந்து சில வாரங்களில் மூச்சுத்திணறலாலும் கஷ்டம் ஏற்பட்டது. மருத்துவர்கள் சத்திரசிகிச்சை மூலம் கழுத் துப் பகுதியில் ஒரு குழாயை பொருத் தினர்.

அதன் துணையோடு சுவாசித்தார். இத னால் பெற்றோர்களான வென்ஜோ (வயது40) மற்றும் கெவின் (வயது30) ஆகியோர் பெரும் வேதனை அடைந்தனர் .



இந்தக் குழந்தையின் கழுத்தில் ஒரு மணி கட்டி அதற்கு டிங்கர் பெல் என பெயர் வைத் திருந்தார்கள். குழந்தை தனியாக இருக்கின்ற சந்தர்ப்பங்களில் தனக்கு பெற்றோரின் உதவி தேவைப்பட்டால் இந்த மணியைத் தான் அழுத்தும்.

இந்தப் பின்னணியில் தான் காற்றுக் குழாயை விரிவுபடுத்தும் சத்திரசிகிச்சையை லண்டன் டாக்டர்கள் வெற்றிகரமாக செய்து முடித்துள்ளனர். சத்திர சிகிச்சை முடிந்து குழந்தையின் பேச்சைக் கேட்க பெற்றோர்கள் பெரும் ஆவலாக இருந்த போது கண்விழித்த அந் தக் குழந்தை பெற்றோரைப் பார்த்து ஹலோ என்ற போது பெற்றோருக்கு ஆனந் தம் தாங்க முடியவில்லை. இந்த நொடிக் காகத் தான் இவ்வளவு காலம் காத்திருந் தோம். இது நடக்கும் என்று நாம் ஒரு போதும் நினைக்க வில்லை என்று தமது மட்டில்லா மகிழ்ச்சியை அவர்கள் வெளிப்படுத்தினர்.

சுவாசத்துக்காகப் பொருத்தப்பட்டுள்ள மூச்சுக்குழாயையும் விரைவில் அகற்றிவிட முடியும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள் ளமை பெற்றோரை பெரு மகிழ்ச்சியில் ஆழ்த் தியுள்ளது. (ஸ்ரீ-4)

## வலி.கிழக்கு பிரதேசசபை எல்லைக்குள் கழிவுகள் போடுவதற்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேச செயலகத்தில் கடந்த 16ஆம் திகதி இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத் தின் படி வலி. கிழக்குப் பிரதேசசபை எல் லைக்குள் கழிவுகள் போடுவதற்கு என பொருத்தமான இடங்கள் இனம் காணப் பட்டுள்ளன.

அந்த வகையில் வலி. கிழக்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஒவ்வொரு உப அலு வலகத்தில் உள்ள கிராம அலுவலர் பிரிவு மக் களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங் களில் காலை வேளையில் மட்டும் கழிவுகள் பொதி செய்து போட்டு வலி. கிழக்கு பிரதேசத் தின் சுத்தம், சுகாதாரத்தை பேணுவதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு பிரதேச சபைச் செயலாளர் கேட்டுள்ளார்.

அத்தோடு கோப்பாய், நீர்வேலி உப அலுவலகங்களில் திங்கள், வியாழக்கிழமை களிலும் உரும்பிராய் ,நீர்வேலி உபஅலு வலகங்களில் செவ்வாய், வெள்ளிக்கிழமை களிலும் புத்தூர் உப அலுவலகங்களில் புதன்கிழமையிலும் அச்சுவேலி உப அலு வலகத்தில் நாளாந்தமும் கழிவுகள் அகற்றப் படவுள்ளன.

**இதற்கமைய கோப்பாய் உப அலுவலக பிரிவுக்குட்பட்ட**

ஜே/257 இருபாலை தெற்கில் செம்மணி சதுப்பு நிலத்திலும் ஜே/258 இருபாலை கிழக்கில் இரும்படிச்சந்திகருகிலும் ஜே/259 கல்வியங்காட்டில் விளையாட்டு அரங்க வீதி, இராஜவீதி இணைக்கும் வீதியிலும் ஜே/260 கோப்பாய் தெற்கில் பழைய வீதி கேணிக்கரை யிலும் ஜே/261 கோப்பாய் மத்தியில் இராஜ வீதி சேமக்காலை அருகிலும் ஜே/262 கோப் பாய் வடக்கில் கோப்பாய் சந்திக்கருகாமை யிலும் கழிவுகள் கொட்டப்படவேண்டும்.

**உரும்பிராய் உப அலுவலகத்துக்குட்பட்ட**

ஜே/263 உரும்பிராய் மேற்கில் சிவகுல வீதி உள்ளேயுள்ள புளியடி,அம்மன்கோயி லடி, வைத்தீஸ்வரா சனசமூக நிலையத்திற்கு அருகில், அன்னங்கை சனசமூக நிலையத் திற்கு அருகிலும் ஜே/264 உரும்பிராய் வடக்கில் கற்பகப்பிள்ளையார் கோயில் பின் வீதி,சரஸ்வதி சனசமூக நிலையம்,சக்தி சன சமூக நிலையங்களிலும் ஜே/265 உரும் பிராய் தெற்கில் வேம்பன் சுடலையிலும் ஜே/ 266 உரும்பிராய் கிழக்கில் உரும்பிராய் இந் துக்கல்லூரி நலன்புரி நிலையம் அருகிலும் ஜே/267 ஊரெழுவில் பொக்கணை மயானப் பகுதியிலும்

**நீர்வேலி உப அலுவலகத்துக்குட்பட்ட**

ஜே/268 நீர்வேலி தெற்கில் வெங்காயச் சங்க முன் பகுதியிலும் ஜே/269 நீர்வேலி வடக் கில் நீர்வேலிச்சந்தைக் காணிக்கருகிலும் ஜே/ 270 நீர்வேலி மேற்கில் கரந்தன் சந்திக் கரு கிலும்

**புத்தூர் உப அலுவலகத்திற்குட்பட்ட**

ஜே/271 சிறுப்பிட்டி வடக்கில் பூதவராஜன் கோயிலுக்கு கிழக்கு தரவைப் பகுதியிலும் ஜே/272 சிறுப்பிட்டி மேற்கில் யா/சி.அ.பாட சாலை வீதி,முகப்புப் பகுதியிலும் ஜே/273 புத் தூர் மேற்கில் கிந்துசிட்டி மயானத்திலும் ஜே/ 275 நவக்கிரியில் நவக்கிரி இந்து மயானத் திலும் ஜே/276 ஆவரங்கால் கிழக்கில் ஆவ ரங்கால் கிழக்கு இந்து மயானத்திலும் ஜே/ 277 ஆவரங்கால் மேற்கில் கரதடி வீதியில் சுடலைக்கு அருகாமையிலும் ஜே/278 புத் தூர் கிழக்கு ஊறணி [illegible] முன்னுள்ள காணி,புத்தூர் கிழக்கு சந்தைக்கு முன் உள்ள காணியிலும் ஜே/279 அச் செழு வில் வேவிய பரத்திலும் ஜே/280 வாதர வத்தையில் வாதரவத்தை மயானத்திற்கு அருகிலும்

**அச்சுவேலி உப அலுவலகத்திற்குட்பட்ட**

ஜே/281 பத்தமேனியில் இந்து மயா னத்திற்கு அருகிலும் ஜே/282 தம்பாலை/ கதிரிப்பாயில் கடற்கரைக் கருகிலும் ஜே/283 இடைக்காட்டில் இடைக்காடு சாமித்திடல் மயா னத்திற்கு அருகில் உள்ள காணியிலும் ஜே/ 284 வளளாயில் சந்தைக் கட்டடத்திற்கு அரு கிலும் ஜே/285 அச்சுவேலி வடக்கில் வல் லைக் கிறேசரிலும் ஜே/286 அச்சுவேலி தெற்கில் முகிழியன் மயானத்திலும் ஜே/286 அச்சுவேலி மேற்கில் தோப்பு இந்து மயானத் திலும் கழிவுகள் கொட்டப்பட வேண்டும் என வலி .கிழக்குப் பிரதேசசபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## சிப்பாயின் மரணத்தை அடுத்து அவரது சகாக்கள் கைது

(கொழும்பு)

திருகோணமலைக் கடலில் இருந்து சிப்பாய் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் கரை ஒதுங்கியுள்ளது. இதையடுத்து சகாக் களான வேறு இரு சிப்பாய்கள் சந்தேகத்தில் இராணுவப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இது குறித்து தெரியவருவதாவது,

மேலதிகாரிகளுக்கு தகவல் வழங்காமல் நான்கு சிப்பாய்கள் கடந்த 11ஆம் திகதி கடலுக்குச் சென்றிருக்கின்றனர். இவர்கள் பயணித்த தோணி மூழ்கத் தொடங்கியது. இதில் மூவர் தப்பிப்பிழைத்தனர் என்றும் ஒருவர் இறந்து விட்டார் என்றும் தெரிவிக்கப் படுகிறது.

ஆனால் தப்பி வந்தவர்கள் இந்த அனர்த் தம் குறித்து மேலதிகாரிகளுக்கு உடனடியாக அறிவிக்காமல் மறைத்து வைத்திருந்தார் கள். இந்நிலையிலேயே இம் மூவரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






கோப்பாய் ஆசிரிய கலாசாலை முத்தமிழ் மன்றத்தால் கண்ணீர் முத்துக்கள் கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை,முத்தமிழ் மன்ற தலைவர் அ.ல.பிலால்,நூலாசிரியர் தி.நந்தினி ஆகியோர் உரையாற்றுவதையும் நூலின் சிறப்புப்பிரதியை சமூக சேவகர் எம்.சீ.எம்.அமீனிடம் இருந்து தொழில் அதிபர் ஐ.விக்னேஸ்வரன் பெற்றுக்கொள் வதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# நீர்க்குழாய் பொருத்துநர் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கிளிநொச்சி பயிற்சி நிலையத்தில் நீர்குழாய் பொருத்துநர் பயிற்சிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிப்பவர்கள் குறைந்த பட்சம் க.பொ.த.(சா.த) தரம் வரை கல்வி கற்றிருக்க வேண்டும். அத்துடன் 16 வயதிற்கும் 35 வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் தமது முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள் என்பவற்றைக் குறிப்பிட்டு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பாக முகாமையாளர், NAITA கனகபுரம் , கிளிநொச்சி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு இந் நிறுவன மாவட்ட முகாமையாளர் சி.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-4)

# இராணுவத்திலிருந்து தப்பியோடியோரை கைது செய்ய விசேட நடவடிக்கை

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களை கைது செய்வதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் 50 ஆயிரம் இராணுவத்தில் இருந்து தப்பி ஓடிய படை வீரர்கள் மறைந்து வாழ்வதாகவும், இவர்களை கைது செய்வதற்கு விசேட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ பொலிஸார் நாடு தழுவிய ரீதியில் தேடுதல் வேட்டைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்செயல்களுடன் இராணுவத்தில் தப்பி ஓடியவர்களுக்கு தொடர்பு இருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இராணுவத்தில் தப்பிய ஓடியவர்களுக்கு அரசாங்கம் பல்வேறு சந்தர்ப்பங்களில் பொதுமன்னிப்பு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# தமிழகத்தில் இருந்து 60 பேர் தாயகம் திரும்பியுள்ளனர்

(கொழும்பு)

யுத்தம் காரணமாக இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து சென்று 20 வருடங்களுக்கு மேல் முகாம்களில் வசித்து வந்த சுமார் 60 இலங்கையர்கள் நேற்று முன்தினம் இலங்கை திரும்பியுள்ளனர்.

இவர்களில் இந்தியாவில் பிறந்த 21 பிள்ளைகளும் அடங்குகின்றனர். வவுனியா, முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இவர்கள் யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில் இலங்கையில் இருந்து படகு மூலம் இந்தியாவுக்கு புலம் பெயர்ந்ததாக நாடு திரும்பியவர்கள் விமான நிலையத்தில் தெரிவித்துள்ளனர்.

யுத்தம் முடிவடைந்து அமைதியான சூழல் ஏற்பட்டுள்ளதால் தாம் நாடு திரும்பியதாகவும் தமது காணிகளில் வீடுகளை அமைத்துக்கொள்ள அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்த்திருப்பதாகவும் தாயகம் திரும்பிய இலங்கையர்கள் கூறியுள்ளனர். (ஸ்ரீ-2)

# இவ்வாண்டில் 348 இலங்கையர்கள் வெளிநாடுகளில் உயிரிழந்துள்ளனர்

இந்த ஆண்டில் 348 இலங்கையர்கள் வெளிநாடுகளில் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.குறிப்பாக சவுதி அரேபியாவில் மட்டும் 94 பேர் கொல்லப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

1.5 மில்லியன் இலங்கை மக்கள் வெளிநாடுகளில் வாழ்ந்து வருவதாக வெளிவிவகார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது. உயிரிழந்தவர்களில் 273 பேரின் சடலங்கள் நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டதாகவும் இதற்கமைய குவைத்தில் 55 பேரும், கட்டார் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் தலா 32 பேரும் உயிரிழந்துள்ளனர். (ஸ்ரீ-2)


## அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

110, அரசடி வீதி, யாழ்ப்பாண த்தைச் சேர்ந்த அம்பிகைபாகன் சண்முகநாதன் கைம்பெண் நாகரத்தினம் என்பவரது மரண சாதன தத்துவ வழக்கு விடயத்தில்

டாக்டர் கதிர்காமலிங்கம் செந்தில் குமரன் 74, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

.........மனுதாரர்.

வழ.இல தத்துவம்/06/2010

எதிர்

1. கணேசலிங்கம் சுதர்சன்
2. கணேசலிங்கம் வசந்தன்
3. சின்னத்தம்பி சக்திகுமாரன் அல்லது சக்திகுமார்
4.பெண் சுமக்களா 88, 1/1, பெரேராலேன், வெள்ளவத்தை, கொழும்பு-6 ஆகியோர் தமது அற்றோணித்தத்துவக்காரர் நாகரத்தினம் கருணாநிதி, 'அரன்ஸ்' 100, அரசடி வீதி, யாழ்ப்பாணம் மூலம் தோற்றம்.
5. மயில்வாகனம் மகிந்தன்
6. பெண் ஜெயகௌரி 49, மிள்கே அவென்யு, மார்க்காம், ஒன்றாரியோ, L6E. IES, கனடா
7. சின்னத்துரைக் குருக்கள் கணேசானந்தக்குரு
8. பெண் தயாகௌரி 300, எல்சன் ஒழுங்கை, மார்க்காம், ஒன்றாரியோ, L3S. 4S4, கனடா
9. நவரத்தினம் மனோகரன்
10.பெண் பாலகௌரி 16, எட்ஜ் வெயர், மிடில்செக்ஸ்,UK ஆகியோர் தமது அற்றோணித் தத்துவக்காரர் சந்திரசேகரம் பிள்ளை பாலகுமார் 359, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் மூலம் தோற்றம்.
11. செல்லத்துரை பொன்னுத்துரை, 105, ராங்மியர் கிரெஸ், மார்க்காம், ஒன்றாரியோ, 3ஆர், 6வை 3,கனடா

...எதிர் மனுதார்கள்.

மேற்படி மனுதார் மேற்படி காலஞ்சென்றவருடைய மரணசாதன மரணச் சொத்துக்கள் தொடர்பில் அதை நிர்வாகிப்பதற்கும் மரணச்சாதன நிர்வாகத் தத்துவப்பத்திரம் அல்லது மரணச்சாதனம் இணைக்கப்பட்ட நிர்வாகத்தத்துவப் பத்திரம் பெறுவதற்கும் இந் நீதிமன்றத்தில் விண்ணப் பித்துள்ளனராதலினால் இதில் அக்கறையுள்ள எவரேனும் 2011ஆம் ஆண்டு தை மாதம் 19ஆம் திகதி காலை 9.00 மணிக்கு இம்மன்றில் தோன்றி தெரிவிக்குமாறு இதனால் அறிவித்தல் தரப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 4ஆம் திகதி

வரைபு:
பவானி சற்குணராசா
மனுதாரரின் சட்டத்தரணி

மன்றின் கட்டளைப்படி
பதிவாளர்.

(3221)


# சட்டவிரோதமாக கையடக்கதொலைபேசி உபகரணங்களை கொண்டுவந்தவர் கைது

(கொழும்பு)

டுபாய் நாட்டிலிருந்து 15இலட்சம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசி உபகரணங்களை சட்டவிரோதமாகக் கொண்டு வந்த வர்த்தகர் ஒருவர் பண்டார நாயக்க சர்வதேச விமானநிலையத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நீர்கொழும்புப் பகுதியைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது. இக் கடத்தல் சம்பவம் குறித்து விமான நிலைய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ)

# இந்திய வீடமைப்பு திட்டப் பதிவுகள்

(கொழும்புத்துறை)

மணியந்தோட்ட மக்களுக்கான இந்திய வீடமைப்புத் திட்டப் பதிவுகள் நல்லூர் பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கு மணியந்தோட்டத்தில் சொந்தக்காணி உரிமையாளர்கள் பலர் பதிவு செய்யப்பட்டு வருகின்றனர்.

அண்மையில் சோபா நிறுவனத்தினர் மணியந்தோட்டத்தில் ஒரு தொகுதி மக்களுக்கு தற்காலிக வீடுகளை அமைத்துக்கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-51)

# யுத்தத்தால் பெற்றோரை இழந்து உதவி பெறும் பிள்ளைகளுடன் கலந்துரையாடல்

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையமானது இலங்கை மாணவர் கல்வி நிலையம் மற்றும் அவுஸ்திரேலியாவின் வளர்ப்புப் பெற்றோர் திட்டம் என்பவற்றின் அனுசரணையுடன் போர் சூழலில் தமது தந்தையை அல்லது உழைப்பாளியை இழந்த 112 பிள்ளைகளுக்கு உதவி வழங்கி வருகின்றது.

இது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலைய ஒழுங்கமைப்புச் செயலாளர் த.பாலதயானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் இலங்கை மாணவ கல்வி நிதியத்தைச் சேர்ந்த ஐவர் அடங்கிய குழுவினர் வருகை தந்து இவ் உதவி பெறும் பிள்ளைகளுடன் கலந்துரையாடவுள்ளனர். (ஸ்ரீ-4)




ஈழத்து சிதம்பரத்தான் திருவடிக்கு
இன்று (15.12.2010) 3ஆம் நாள் உற்சவம்
(திருவெம்பாவை)

## சோதிமயமான சுந்தரேசன் எங்கள் சிவன்

சேவை தந்த வாசகர்க்குக்
குருந்தின் அடியிற் குருவாகி
சாவை மறுக்கும் பேரின்ப
சாரம் பொழிந்த தனிமுகிலே!
நாவை அசைத்துன் புகழ்பாட
நயந்து விறந்துன் அடி அடைந்தேன்
தேவை அளித்து வரம் தருவாய்
தேவ தேவ ஈழத்து சிதம்பரனே!

(J-1809) மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏ எச்1 என்1 வைரஸ் காய்ச்சல் நாடெங்கும் தீவிரமடைந்துள்ளது

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

(கொழும்பு)

நாடெங்கும் மீண்டும் புதிய இன்புளுவென்ஸா தீவிரமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது. புதிய இன்புளுவென்ஸா ஏ. எச்1 என்1 வைரஸ் காய்ச்சல் நாடெங்கிலும் தீவிரமடைந்திருப்பதாக சுகாதார அமைச்சின் நோய் பரவல் தடுப்புப் பிரிவின் பிரதம மருத்துவ நிபுணர் சுதத் பீரிஸ் தெரிவித்தார்.

தடிமன், இருமல் மற்றும் கடும் காய்ச்சல், உடல்வலி போன்றவாறான அறிகுறிகள் தென்பட்டால் தாமதிக்காது அரசாங்க மருத்துவ நிபுணரை அணுகி சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறும் அவர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

புதிய இன்புளுவென்ஸா ஏ எச்1 என்1 வைரஸ் நோய் நாட்டின் பல பிரதேசங்களிலும் பரவியுள்ளது. கடந்த செப்டெம்பர் மாதம் 20 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரையும் 242 பேர் இந்நோய்க்கு உள்ளாகியுள்ளனர்.

தற்போது நாடெங்கிலும் பரவியுள்ள இந்நோய்க்கு ஒன்று தொடக்கம் 10 வயதுக்கும் 21வயது தொடக்கம் 30 வயதுக்கும் இடைப்பட்டோரே பெரிதும் உள்ளாகியுள்ளனர்.

இந்நோய் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை உட்பட சகல மாவட்டங்களிலும் பரவி இருந்தாலும் கொழும்பு மாவட்டத்திலேயே இந்நோய்க்கு அதிகளவிலானோர் உள்ளாகி இருக்கின்றனர் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## கிழக்கு மாகாண பதில் முதலமைச்சர் பதவியேற்பு

கிழக்கு மாகாண பதில் முதலமைச்சராக மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமா லெப்பை நேற்று முற்பகல் கிழக்கு மாகாண ஆளுநர் ரியல் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரம முன்னிலையில் பதவியேற்று கொண்டார்.

முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் வெளிநாட்டில் இருந்து வரும் வரை இவர் பதில் முதலமைச்சராக செயலாற்றுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# இந்துசமயப் போட்டி பரீட்சை முடிபுகள்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கடந்த மாதம் நடத்தப்பட்ட ஆறுமுக நாவலர் குருபூசை விழா தொடர்பான இந்து சமயப் போட்டிப்பரீட்சை முடிபுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு.

**பேச்சு**

*கீழ்ப்பிரிவு*

அ.வாகீஷ்பரன் (பரராஜசேகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, இணுவில்), ந.கேனுகா (தொண்டர் திருநாவுக்கரசு அறநெறிப் பாடசாலை, புங்குடுதீவு), மூன்றாமிடம் இருவர் வைஷ்ணவி, வி.துவிறதி (தச்சை ஐங்கரன் அறநெறிப் பாடசாலை)

*மத்திய பிரிவு*

இ.ரூபலக்ஸ்மணன் (கோமாதா அறநெறிப்பாடசாலை, அராலி), பா.சௌமியா (தச்சை ஐங்கரன் இந்து அறநெறிப் பாடசாலை), இ.லோஜிதன் (சதாவதானி கதிரைவேற்பிள்ளை அறநெறிப் பாடசாலை)

*மேற்பிரிவு*

க.கஜவானி (ஆத்மஜோதி அறநெறிப் பாடசாலை, ஏழாலை), சு.சுலக்ஷன் (சதாவதானி கதிரைவேற்பிள்ளை அறநெறிப் பாடசாலை), ரா.அறிவழகி (சைவவித்தியா விருத்திச் சங்க அறநெறிப்பாடசாலை, திருநெல்வேலி)

**எழுத்துப் பரீட்சை**

*கீழ்ப்பிரிவு*

ஸ்ரீ.கிருஷ்ணவேணி (மருதடி விநாயகர் அறநெறிப் பாடசாலை, மானிப்பாய்), அ.அனுஷன் (கோகுலம் அறநெறிப் பாடசாலை, அராலி), யோ.கஜந்தன் (தொண்டர் திருநாவுக்கரசர் அறநெறிப்பாடசாலை, புங்குடுதீவு)

*மத்திய பிரிவு*

ஜெ.தனுஜா (நெல்லண்டை அம்மன் அறநெறிப் பாடசாலை,தும்பளை), சி.நிதர்சனா (விக்கினேஸ்வரா அறநெறிப் பாடசாலை, கரவெட்டி), தி.ஹேமமாலினி (சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை)

*மேற்பிரிவு*

ச.யதுஷா (இணுவில் கந்தசுவாமி கோயில் அறநெறிப் பாடசாலை), ம.தாட்சாயினி (கோகுலம் அறநெறிப் பாடசாலை,அராலி), வி.வினோதினி (வேதபாராயணர் அறநெறிப் பாடசாலை, கோண்டாவில்)

**கட்டுரைப் போட்டி**

*கீழ்ப்பிரிவு*

ர.சான்றோன் (துங்கம்மா அறநெறிப் பாடசாலை,புளியங்கூடல்), கோ.குயாளினி (விநாயகர் அறநெறிப் பாடசாலை), மூன்றாம் இடம் இருவர் ஸ்ரீ. வேணுஜா (நெல்லண்டை அம்மன் அறநெறிப் பாட சாலை), அ.யசிந் தினி (கிழவன்காடு கலாமன்ற அறநெறிப் பாடசாலை, காரைநகர்)

*மத்தியபிரிவு*

சி.சாவித்திரி (வேதபாராயணஅறநெறிப் பாடசாலை, கோண்டாவில்), ர.லக்சியா (ஆத்ம ஜோதி முருகமூர்த்தி அறநெறிப் பாடசாலை,ஏழாலை),நி.விணோஜா (திக்கரை முருகமூர்த்தி அறநெறிப் பாடசாலை, காரைநகர்)

*மேற்பிரிவு*

சி.பிரசாந் (தொண்டர் திருநாவுக்கரசு அறநெறிப் பாடசாலை), நா.சிவமத்தன் (ஆதி முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை), கு.பிரியங்கா (சங்கரத்தை முருகமூர்த்தி அறநெறிப் பாடசாலை)

**கவிதைப் போட்டி**

*மத்திய பிரிவு*

ஜெ.நிதர்சன் (மருதடி விநாயகர் அறநெறிப் பாடசாலை, மானிப்பாய்), சி.ஹம்சாளினி (அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை), சி.சுபாஷினி (வேதபாராயணர் அறநெறிப் பாடசாலை, கோண்டாவில்)

*மேற்பிரிவு*

செ.சுதாங்கி (விக்னேஸ்வரா அறநெறிப் பாடசாலை, கரவெட்டி), வி.நாகலக்சனா (புங்குடுதீவு தொண்டர் திருநாவுக்கரசு அறநெறிப் பாடசாலை), வி.யசிந்தினி (அரசடிப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை, மிருசுவில்)

**நாடகம் (திறந்த போட்டி)**

பரமானந்த ஆச்சிரம இந்து அறநெறிப் பாடசாலை,வதிரி, கரவெட்டி, சங்கரத்தை முருகமூர்த்தி அறநெறிப் பாடசாலை, சங்கரத்தை (ஸ்ரீ-3)

# சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதிய திட்டமொன்றை நடைமுறைப்படுத்த தீர்மானம்

## ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் அதேவேளை சமுர்த்தி உதவி பெறுவோர் அணியில் இணைய இடமளிக்கப்படமாட்டாது என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சமுர்த்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் பதினொராவது வருடாந்த மாநாடு நேற்று முன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். நாடளாவிய ரீதியில் பல்லாயிரக்கணக்கான தொழிற்சங்க உறுப்பினர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில்,

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

அதற்கான ஆவணங்களை நிதியமைச்சுக்கு கையளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எவ்வாறாயினும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றதும் அவர்களை சமுர்த்தி உதவி பெறுவோர் அணியில் இணைய இடமளிக்கமாட்டோம்.

திட்டமிட்ட செயற்பாடுகளின் மூலம் நாட்டை அபிவிருத்தியில் கட்டியெழுப்பும் எதிர்காலத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டியுள்ளது. அடிப்படை வசதிகள் அனைத்தும் கிராமப் புறங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்குப்பிரதேசங்களை நாம் மீளக் கட்டியெழுப்பி வருகிறோம். 30 வருட காலம் பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் தலை நிமிர்வதற்கு நாம் வழி வகை செய்ய வேண்டும்.

ஏனைய பிரதேச மக்கள் போன்று சுதந்திரமாக வாழக்கூடிய உரிமையையும் சூழலையும் அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டியதும் நம் அனைவரினதும் பொறுப்பாகும்.அதனை நாம் நிறைவேற்றுவோம்.

எதிர்வரும் 2012ஆம் ஆண்டுக்குள் நம் நாட்டில் சகல கிராமங்களுக்கும் மின்சாரத்தைப் பெற்றுக்கொடுப்பதுடன் வீதிகள், பாடசாலைகள்,மருத்துவமனைகள் உள்ளிட்ட அனைத்தையும் மீள கட்டியெழுப்புவோம். பாரிய அபிவிருத்தித்திட்டங்கள் பல தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவை எதிர்கால சந்ததிக்கான முதலீடுகளாகும்.

போதைப்பொருள் மூலம் இருவர், மூவர் கோடீஸ்வரராகின்றனர். எனினும் இலட்சக்கணக்கான அப்பாவி இளைஞர்கள் அதற்குப் பலியாகின்றனர். அவ்வாறு இளைஞர்கள் பலியாவதை தடுப்பதா அல்லது சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டனை வழங்குவதா என்பதே எம் முன் எழும் கேள்வியாகும். நாட்டை இந்நிலையில் இருந்து மாற்ற வேண்டியுள்ளது.

இன்று சிலர் தமக்கான பொறுப்பினை மறந்து செயற்படுகின்றனர். பேச்சுவார்த்தைக்கு முன்வராத தொழிற்சங்கள் இன்று உள்ளன. சில தொழிற்சங்கத்தினர் வெளிநாடுகளுக்குச் சென்று இலங்கைக்கு ஜீ.எஸ்.பி. வரிச்சலுகை வழங்கக்கூடாது என்கின்றனர். அதற்கான கடிதங்களை அனுப்புகின்றனர். அத்தகையோருக்கு அங்கு பெருமளவு பணம் கிடைக்கின்றது.

அவர்கள் நாட்டையும் இனத்தையும் காட்டிக்கொடுப்பவர்கள். நாம் எங்கு சென்றாலும் நாட்டிற்கு கௌரவம் அளிப்பவர்கள் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அத்துடன் நேற்று முன்தினம் இந்நிகழ்வில் மேற்படி தொழிற்சங்க ஊழியர்கள் சிலருக்கு கடன் உதவிகளும் சிறந்த சேவைக்கான விருதும் வழங்கப்பட்டன. (ஸ்ரீ-2)



இலங்கை கராத்தே சங்கத்தினால் வென்னப்புல உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் நடத்தப்பட்ட தேசிய கராத்தே போட்டியில் வெற்றியீட்டி பதக்கமும் சான்றிதழ்களும் பெற்றுக்கொண்ட பருத்தித்துறை தற்காப்புக்கழக வீரர்களான (இடமிருந்துவலம்) ஆர்.ஜெயராஜ், பி.துவாரகா, எஸ்.சிந்துஜா, ஈ.ஆழிக்குமரன், கே.பிரசாந்தினி, எஸ்.தமிழ்ச்செல்வன், எம்.திபாகர் ஆகியோருடன் பயிற்றுவித்த ஆசிரியர்களும் நிற்பதை படத்தில் [illegible].

# பொலிஸ் அறிக்கைகளை போலியாக தயாரித்து விற்பனை செய்தோர் கைது

(கொழும்பு)

பொலிஸ் அறிக்கைகளை போலியான முறையில் தயாரித்து விற்பனை செய்து வந்த நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். கொழும்பு , தெமட்டகொட பிரதேசத்தில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் ஒரு பொலிஸாரும் இரண்டு முஸ்லிம் நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெமட்டகொட பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் போலியான முறையில் இந்த பொலிஸ் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

[illegible] வீட்டிலிருந்து போலி ஆவணங்கள் மற்றும் 30 சீல் கட்டைகள் ஆகியன மீட்கப்பட்டுள்ளதுடன் கைப்பற்றப்பட் டுள்ள ஆவணங்களில் உயர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஐவரின் பெயர்களின் இந்த அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அத்துடன் நாட்டிலுள்ள 28 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளின் போலி இறப்பர் முத்திரைகளும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட நபர்கள் நீண்ட காலமாக இவ்வாறு போலியான பொலிஸ் அறிக்கைகளை தயாரித்து வெளிநாடு செல்லும் தமிழர்களுக்கு பெருந்தொகைப் பணத்திற்கு விற்பனை செய்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணய நிதியத்தின் உதவியுடன் புலிகளின் சொத்துக்களை முடக்க அரசு திட்டம்

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் சொத்துக்களை முடக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

உலகின் பல நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சொத்துக்கள் காணப்படுவதாகவும் அந்த சொத்துக்களை சுவீகரித்துக் கொள்ள அரசாங்கம் முயற்சி மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் பிரகடனங்களுக்கு அமைவாக விடுதலைப் புலிகளின் சொத்துக்களை முடக்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் ஒத்துழைப்பு வழங்கவுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையின் 1267 ஆம் மற்றும் 1373 ஆம் பிரகடனங்களின் சொத்துக்களை சுவீகரிப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் உதவிகளை வழங்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பிரகடனங்களை அமுல்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் எதிர்நோக்கக் கூடிய சிக்கல்களுக்கு சர்வதேச நாணய நிதியம் தீர்வுகளை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையின் 1267 ஆம் பிரகடனத்தின் அடிப்படையில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புக்கள், பயங்கரவாதிகள் கொடுக்கல்- வாங்கல்களை மேற்கொள்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

சொத்துக்களை முடக்குதல், பயணக் கட்டுப்பாடு விதித்தல், ஆயுதக் கொடுக்கல்- வாங்கல்களை தடை செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என இந்தப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1373 ஆம் பிரகடனம் பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை பிரகடனங்களை அமுல்படுத்துமாறு இலங்கை அரசாங்கம் குறைந்த பட்சம் 15 நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பயங்கரவாதிகளின் சொத்துக்களை முடக்கும் நோக்கில் இலங்கை அரசாங்கம் பல நாடுகளுடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## முன்னாள் புலி உறுப்பினர்களை சமூகத்துடன் இணைக்கும் திட்டம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலி இயக்கத்திலிருந்து சரணடைந்த முன்னாள் உறுப்பினர்களை மீள்குடியேற்றவும் ஒன்றிணைக்கவும் புனர்வாழ்வு ஆணையாளர் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இது தொடர்பாக சமய, சமூக தலைவர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு ஒன்று நேற்று காலை மட்டக்களப்பு டேபா மண்டபத்தில் நடைபெற்றது.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தலைமையில் இடம்பெற்ற இந்தச் செயலமர்வில் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உள்ளிட்ட பல சமய தலைவர்கள் , பிரதேச செயலாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (ஸ்ரீ-2)

## வீட்டில் நூலகம் இருந்தாலே போதும் குழந்தைகள் புத்திசாலிகளாக மாறுவர்

### ஆய்வில் தகவல்

குழந்தைகள் புத்திசாலிகளாக இருக்க அவரவர் வீடுகளில் சிறு நூலகங்கள் இருந்தாலே போதும் என அமெரிக்கா, நெவேடா பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் குழந்தைகள் புத்திசாலிகளாக விளங்க வேண்டும் என விரும்புகிறார்கள்.

இதற்காக குழந்தைகளுக்கு வகுப்பு பாடங்களுடன் தனித்திறனாய்வு பயிற்சிகளாக யோகா, தியானம், கராத்தே, பரத நாட்டியம், விளையாட்டு போன்ற சிறப்பு பயிற்சிகளை வழங்குகின்றனர்.

மேலும் குழந்தைகளின் உடலுக்கும் மனதிற்கும் சேர்த்து ஆரோக்கியமான உணவுகளை சாப்பிட வலியுறுத்துவது வழக்கம்.

குழந்தைகள் கல்வியில் ஆர்வம் செலுத்துவது குறித்து, அமெரிக்காவின் நெவேடா பல்கலைக்கழகம் 20 ஆண்டுகால ஆராய்ச்சியில் ஈடுபட்டது.

இந்த ஆய்வில் வீட்டில் 500 புத்தகங்கள் கொண்ட சிறு நூலகம் இருக்கும் பட்சத்தில் குழந்தைகளின் ஆர்வம் புத்தங்கள் பக்கம் திரும்புவது தெளிவானது.

மேலும் இந்த ஆய்வில் மூன்று ஆண்டுகள் மட்டுமே படித்த பெற்றோர் வீடுகளிலும் பின்னர் 16 ஆண்டுகள் படித்த பெற்றோர் வீடுகளில் சிறு நூலகம் அமைத்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அப்போது குழந்தைகளின் படிப்பில் பெரும் மாறுதல்கள் காணப்பட்டன. சிறு நூலகங்கள் இருக்கும் வீட்டில் மூன்று வயதிலேயே குழந்தைகள் புத்தகங்கள் பக்கம் திரும்புவது கண்டுபிடிக்கப்பட்டது.

அவ்வாறு நூலகம் உள்ள வீடுகளில் வளரும் குழந்தைகளின் கல்வித் தரமும் சராசரி உயர்ந்தது.

இந்த ஆய்வின் மூலம் பெற்றவர்கள் சிறந்த கல்வியாளர்களாக இருந்தால் தான் குழந்தைகளும் நன்றாக படிப்பார்கள் என்ற நம்பிக்கையும் மாறியுள்ளது. (ஸ்ரீ-2-4)

## சுயலாபத்திற்காக சில தொழிற்சங்கங்கள் நாட்டைக் காட்டிக் கொடுக்கின்றன

### ஜனாதிபதி குற்றச்சாட்டு



சில தொழிற்சங்கங்கள் பணத்திற்காக நாட்டை காட்டிக் கொடுத்து வருவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். இலங்கைக்கு எதிராக பிரசாரங்களை மேற்கொள்வதன் மூலம் குறித்த தொழிற்சங்கங்கள் பணமீட்டி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மனித உரிமை மீறப்படுவதாகவும் சுதந்திரம் முடக்கப்படுவதாகவும் குரல் கொடுக்கும் தொழிற் சங்கங்கங்களுக்கு வெளிநாட்டுச் சக்திகள் நிதி உதவிகளை வழங்குவதாக அவர் தெரிவித்துள்ளார்.

சுயலாப நோக்கங்களுக்காக இவ்வாறான தொழிற்சங்கங்கள் நாட்டைக் காட்டிக் கொடுப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற அகில இலங்கை சமுர்த்தி அதிகாரிகள், விவசாய ஆய்வாளர்கள் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சில தொழிற்சங்கங்கள் வெளிநாடுகளுக்குச் சென்று ஜீ.எஸ்.பி. சலுகைத் திட்டத்தை வழங்க வேண்டாம் என கோரிக்கை விடுத்துள்ளன. இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அவர்களுக்கு பணம் கிடைக்கின்றது.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளை அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது குறித்து ஆராயப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### காக்கணங்கொடி

Botanical Name- Clitoria ternatea
Family-Fabaceae.
Engl-Winged-leaved clitoria/ Butterfly pea.
Sinh-Elakatarolu.

இது பல்லாண்டு காலம் நிலைத்து நிற்கக் கூடிய நீண்ட, உருளை வடிவான தண்டுடைய, சுனைகளையும் கொண்ட ஒரு செடியாகும். இலைகள் ஒன்று விட்ட இலை ஒழுங்கு கொண்டவை. 3.7-5 செ.மீ நீளமுடையது. பூக்கள் ஒழுங்கற்றவை, இருபாலானவை. கருநீல அல்லது வெண்ணிற பூக்களைக் கொண்டவை. 10-12.5 செ.மீ நீளமுடைய அவரை வடிவ காய்கள் காணப்படும். 8-12 விதைகள் காணப்படும். விதைகள் பச்சையாகவும், மண்ணிற புள்ளிகள் உடையதாகவும் காணப்படும். மார்கழியிலிருந்து தை மாதம் வரை பூக்களை கூடுதலாக அவதானிக்கலாம்.

**பரம்பலும், இனவிருத்தியும்:**

வேலியோரத்திலும், தோட்டங்களிலும் வைத்து பயிராகும் ஒரு வகைக் கொடி. இக்கொடியின் பூக்களின் நிற வேற்றுமையைக் கொண்டு, இது வெள்ளை, நீலம் என இரு வகையாக பிரிக்கப்படுகிறது. இதில் வெள்ளை இனமே மேலானது. விதைகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

**மருத்துவப் பயன்கள்:**

- இதனுடைய இலைகள், பூக்கள், இளம் பிஞ்சுகள் இன்றும் இந்தியாவின் கேரள மக்களால் இலை வகை மரக்கறியாக பயன்படுத்தப்படுகிறது. இதில் கல்சியம் சத்து அதிகளவில் காணப்படுகின்றது.
- காக்கணவன் வேர்க்குடிநீரில் 15 மில்லியனை தேன் அல்லது நெய்யுடன் கலந்து குழந்தைகளுக்கு சத்து மருந்தாகவும் (General tonic) மூளை வளர்ச்சியை கூட்டவும், தசைகளை வலுப்படுத்தவும் பயன்படுத்தப்படுகின்றது.



- வெள்ளை காக்கணவன் வேர்களை சேகரித்து நன்கு கழுவி, நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து 1-2 கிராம் அளவு காலை, மாலை வெந்நீரில் கொடுக்க மூட்டு வியாதிகள் குணமடையும்.
- சிறுநீர் தாரையில் ஏற்படும் எரிச்சலிற்கு வெள்ளை காக்கணவன் வேர்ச்சாறு (Fresh) 20 மில்லி அளவு காலை, மாலை 3 நாட்கள் எடுக்க எரிச்சல் தணியும்.
- இதன் இலைச்சாறும், வேர்ச்சாறும் சம அளவாக கலந்து 15 மில்லி வீதம் கொடுத்துவர ஆஸ்துமா நோயில் ஏற் படும் களைப்பு, வியர்வை நீங்கும்.
- இதன் இலைகளை உப்புச் சேர்த்து நெறிக் கட்டிகளுக்கு பூச வீக்கம் கரையும்.
- விதையை இளஞ்சூட்டில் வறுத்து பொடித்து 1-11/2கிராம் வரை கொடுக்க மலச்சிக்கல் நீங்கும். ஆனால் விதைகளை முதலில் இளஞ்சூட்டில் வறுத்த பின்பே பயன்படுத்த வேண்டும்.
- காக்கணவன் விதைத்தூள் 7 பங்கு, இந்துப்பு 7 பங்கு, சுக்குத் தூள் ஒரு பங்கு எடுத்து நன்றாக ஒன்றுபடக்கலந்து, 1-8 கிராம் அளவு கொடுக்க யானைக்கால் நோய் நீங்கும்.
- காக்கணவன் வேர்த்தூள் 200-300 மில்லிகிராம் எடைவீதம் குழந்தைகட்கு கொடுக்க வாந்தி, ஓங்காளம், மந்தம் ஆகியவை தீரும்.
- காக்கணவன் வேர் 260 மில்லி கிராம் அளவு எடுத்து 130 மில்லி அளவு 15 நிமிட நேரம் ஊறவைத்து 30-60 மில்லி கொடுத்து வர மலச்சிக்கல் நீங்குவதுடன் சிறுநீர் நன்றாக வெளியேறும்.
- காக்கணவன் வேர்-8 கிராம், திப்பிலி-8 கிராம், சுக்கு-12 கிராம் , விளாம்பிசின்-8 கிராம் எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து நன்கு அரைத்து வெந்நீர் விட்டும் அரைத்து 65 மில்லிகிராம் மாத்திரையாக உருட்டி, நிழலில் உலர்த்தி குழந்தைகட்கு 1/2 மாத்திரை தாய்ப்பாலில் உரசிக் கொடுக்க வலிப்பு, மந்தம் தீரும். உடல் பலமடையும். காக்கணலன் வேரை பயன்படுத்த முன்பு பாலில் நன்கு அவித்து கழுவி எடுத்த பின் பயன்படுத்த வேண்டும்.
- குழந்தைகட்கு ஏற்படும் பொடுகு, தலை அவியலுக்கு காக்கணவன் இலைகளை கழுவி நன்கு அரைத்து தேய்த்து தலை முழுகி வர பொடுகு, தலைஅவியல் தீரும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம், கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1978 இல் தேசிய கீதத்தை மொழிபெயர்த்து புத்தகங்களில் அச்சிட்டமை கேலிக்குரியது

## அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

இறந்தகாலத்தில் செய்த தவறை திருத்துவதற்காக எடுக்கப்பட்ட தீர்மானமே தேசிய கீதத்தை சிங்களத்தில் மாத்திரம் பாட வேண்டும் என்ற அரசாங்கத்தின் தீர்மானம் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

உலகில் எந்த நாடும் தனது தேசிய கீதத்தை மொழிபெயர்த்து பாடுவதில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் பல மொழிகள் பேசப்பட்ட போதிலும் ஒரே மொழியில் தேசிய கீதம் பாடப்படுகிறது. தேசிய கீதம் என்பது சகல இனங்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதால் அதனை ஒரே மொழியில் பாட வேண்டும் என்ற தீர்மானத்தை அனைத்து இனங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1978 ஆம் ஆண்டில் தேசிய கீதத்தை மொழிப்பெயர்த்து அதனை பாடப்புத்தகங்களில் கூட அச்சிட்டமை கேலிக்குரியது எனவும் அமைச்சர் வீரவன்ச தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# பட்டப்பகலில் பெருந்தொகை பணம்,நகைகள் கொள்ளை

(கொழும்பு)

மன்னார் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அதிகாரி ஒருவரின் வீட்டில் நேற்று முன்தினம் காலை பட்டப்பகலில் பாரிய கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் மூர்வீதியில் உள்ள அவரது வீட்டில் நேற்று காலை ஒருவரும் இல்லாத நிலையில் உட்புகுந்த திருடர்கள் 200 பவுண் தங்க நகைகள் மற்றும் 3 இலட்சத்து 27ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றை திருடியுள்ள சம்பவம் மன்னார் மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவ தினம் காலை 8.30 மணியளவில் வீட்டில் ஒருவரும் இல்லாத நிலையில் வீட்டின் வளவுக்குள் சென்று ஓட்டைக் கழற்றிக்கொண்டு வீட்டினுள் உட்புகுந்த மர்ம நபர்கள் வீட்டின் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 200 பவுண் நகைகள் மற்றும் 3 இலட்சத்து 27ஆயிரம் ரூபாய் பணம் ஆகியவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

காலை 9.30 மணியளவில் வீட்டு உரிமையாளர்கள் வீட்டினுள் சென்ற போது அலுமாரி உடைக்கப்பட்டு பொருட்கள் களவாடப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. இது தொடர்பாக வீட்டின் உரிமையாளர்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மேற்படி கொள்ளைச் சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். பட்டப்பகலில் இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை மன்னார் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. (ஸ்ரீ-2)

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தயாரிக்கும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு தமது இறுதி அறிக்கையைத் தயாரிக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு மற்றும் கொழும்பு உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களால் அளிக்கப்பட்ட சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்படுகிறது.

இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு வரும் நிலையில் தொடர்ந்தும் மக்களின் சாட்சியங்கள் பதிவு செய்யப்படுமெனக் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவரும் முன்னாள் சட்டமா அதிபருமான சீ.ஆர்.டி. சில்வா தெரிவித்துள்ளார்.

போர்ச்சூழலால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு -கிழக்கு மாகாணங்களிலுள்ள பல்வேறு மாவட்டங்களில் ஏற்கனவே ஆணைக்குழுவின் அமர்வுகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ)

# மின்னுற்பத்தி நிலையங்களை பார்வையிடுவதற்கு வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள நான்கு மின்னுற்பத்தி நிலையங்களைப் பார்வையிடுவதற்கு நேற்று முதல் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

விக்டோரியா, சமனவெவ மற்றும் விமலசுரேந்திர நீர்மின்னுற்பத்தி நிலையங்களையும் களனிதிஸ்ஸ அனல் மின்னுற்பத்தி நிலையத்தையும் நேற்றுமுதல் பார்வையிட முடியும் என இலங்கை மின்சார சபையின் தலைவர் வித்தியா தில்ருக் அமரபால குறிப்பிட்டார்.

இந்தத்திட்டம் முதலில் பாடசாலை மாணவர்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-4)

# 2010.12 15 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- **1256** - மொங்கோலியப் பேரரசன் குலாகு கான் அலாமுட் (இன்றைய ஈரானில்) என்ற இடத்தைக் கைப்பற்றி அழித்தான்.
- **1799** - முற்றிலும் உள்ளூர் மக்களைக் கொண்ட முதலாவது ஆங்கில செமினறி கொழும்பில் அமைக்கப்பட்டது.
- **1864** - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் கூட்டமைப்புப் படைகளை டென்னசியில் முற்றாகத்தோற்கடித்தனர்.
- **1891** - ஜேம்ஸ் நெய்ஸ்மித் கூடைப்பந்தாட்டத்தை முதன் முதலாக அறிமுகப்படுத்தினார்.
- **1905** - அலெக்சாண்டர் புஷ்கினின் கலாசார பழைமைகளைப் பேணும் பொருட்டு சென்பீட்டர்ஸ் பேர்க்கில் புஷ்கின் மாளிகை அமைக்கப்பட்டது.
- **1914** - சேர்பிய இராணுவம் பெல்கிரேடை மீண்டும் கைப்பற்றியது.
- **1914** - ஜப்பானில் மிட்சுபிஷி நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 687 பேர் கொல்லப்பட்டனர்.
- **1960** - மன்னர் மகேந்திரா நேபாளத்தின் அரசைக் கலைத்து நாட்டின் முழு அதிகாரத்தையும் தனதாக்கிக்கொண்டார்.
- **1965** - த சவுண்ட் ஒஃப் மியூசிக் திரைப்படம் வெளியானது.
- **1967** - ஒகையோவில் ஒகையோ ஆற்றிற்கு மேலே செல்லும் வெள்ளிப் பாலம் உடைந்து விழ்ந்ததில் 46 பேர் கொல்லப்பட்டனர்.
- **1970** - சோவியத் ஒன்றியத்தின் வெனேரா 7 விண்கலம் வெள்ளிக் கோளின் மேற்பரப்பில் மெதுவாக இறங்கிய முதலாவது கலமாகும். இதுவே வேறொரு கோளின் மீது இறங்கிய முதலாவது விண்கலமாகும்.
- **1970** - தென் கொரியப் பயணிகள் கப்பல் கொரிய நீரிணையில் மூழ்கியதில் 308 பேர் கொல்லப்பட்டனர்.
- **1978** - மக்கள் சீனக் குடியரசை அங்கீகரிப்பதாகவும் தாய்வானுடனான உறவுகளைத் துண்டிப்பதாகவும் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் அறிவித்தார்.
- **1994** - இணைய உலாவி நெட்ஸ்கேப் நவிகேட்டர் 1.0 வெளியிடப்பட்டது.
- **1995** - ஈழத் தமிழருக்கு ஆதரவு தெரிவித்து திருச்சியில் "அப்துல் ரவூஃப்" என்பவர் தீக்குளித்து இறந்தார்.
- **1997** - தஜிகிஸ்தான் விமானம் ஒன்று ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷார்ஜா விமான நிலையத்திற்கு அருகில் வீழ்ந்து நொருங்கியதில் 85 பேர் கொல்லப்பட்டனர்.
- **1997** - தென் கிழக்கு ஆசியாவை அணுவாயுதமற்ற பகுதியாக அறிவிக்கும் உடன்படிக்கை பாங்கொக்கில் கையெழுத்திடப்பட்டது.
- **2001** - பீசாவின் சாயும் கோபுரம் 11 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் திறக்கப்பட்டது.
- **2006** - கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கொழும்பில் இனம் தெரியாத ஆயுததாரிகளினால் கடத்தப்பட்டார்.

### பிறப்புகள்

- **0037** - நீரோ மன்னன், ரோமப் பேரரசன் (இ. 68)
- **1832** - அலெக்சாந்தர் கஸ்டவ் ஈபல், பிரெஞ்சுப் பொறியியலாளர் (இ. 1923)
- **1852** - ஹென்றி பெக்கெரல், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு இயற்பியலாளர் (இ. 1908)
- **1936** - சோ.ந.கந்தசாமி, தமிழறிஞர்
- **1971** - ஜீவ் மில்க்கா சிங், இந்திய கோல்ஃப் விளையாட்டு வீரர்

### இறப்புகள்

- **1675** - ஜொஹான்னெஸ் வெர்மீர், நெதர்லாந்து நாட்டு ஓவியர். (பி.1632)
- **1950** - சர்தார் வல்லபாய் பட்டேல், இந்திய அரசியல் தலைவர் (பி.1875)
- **1966** - வால்ட் டிஸ்னி, கார்ட்டூன் ஓவியர் (பி. 1901)

## 1941-பெரும் இன அழிப்பு: உக்ரேனின் ஹார்க்கிவ் நகரில் 15ஆயிரம் யூதர்கள் நாசிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு ஆயுதம் கடத்திய குற்றச்சாட்டில் கைதான இளைஞன் ஒரு வருடத்தின் பின் விடுதலை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்காக வாகனத்தில் ஆயுதங்களை ஏற்றி சென்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞன் ஒருவரை கொழும்பு மேல்நீதிமன்றம் சுமார் ஒரு வருடத்தின் பின் நிரபராதி என விடுதலை செய்துள்ளது.

யாழ்ப்பாணம், நெல்லியடியைச் சேரந்த சுந்தரம் முகுந்தன் என்பவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர் ஆவார்.

கொழும்பில் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் நால்வர் ஆயுதங்களை ஏற்றி சென்ற போது இவரின் வாகனத்தில் பயணித்து இருந்தனர் என்று குற்றப்பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டு இருந்தது.

தெரிந்து கொண்டே பொலிஸாருக்கு தகவல் வழங்கத் தவறி விட்டார் என்று மன்றுக்கு கூறப்பட்டது.

இவரின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசா ஆஜராகி வாதாடினார். இவரால் சுய விருப்பத்தின் பேரில் அல்லது வற்புறுத்தலின் பேரிலேயே குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் வழங்கப்பட்டு இருக்கின்றது. இவ் வழக்கில் இவருக்கு எதிராக வேறு சாட்சிகளோ சான்றுகளோ கிடையாது என்றும் எனவே, இவரை விடுவிக்க வேண்டும் என்றும் வாதங்களை முன்வைத்தார்.

சட்டத்தரணியின் வாதங்களை ஏற்றுக் கொண்ட நீதிபதி சுனில் ராஜபக்ஷ குற்றஞ் சாட்டப்பட்டு இருந்த இளைஞனை நேற்று முன் தினம் நிரபராதியென விடுவித்தார். (ஸ்ரீ-2)

# வருடாந்த ஒன்றுகூடல்

(சுரவெட்டி)

மந்திகை ஆதார வைத்தியசாலையின் ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடலும் உதவி வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எ.நந்தகுமார் தலைமையில் வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-3-24)

# முதலாளித்துவ கோட்பாட்டிலிருந்து விலகும் வரை ஐ.தே.க.வில் மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிர்கட்சியின் ஒத்துழைப்பை எதிர்பார்க்க முடியாது என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

எதிர்கட்சி மாற்று அதிகாரங்களை வலுப்படுத்துவதற்காக அரசாங்கத்தின் மீது பல்வேறுபட்ட குற்றச்சாட்டுக்களை முன் வைத்து வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் முதலாளித்து கோட்பாடு நிறைந்து காணப்படுகிறது எனவும் அந்த கோட்பாட்டில் இருந்து விலகும் வரை கட்சியில் மாற்றங்களை எதிர்பார்க்கமுடியாது எனவும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# நாடளாவிய ரீதியில் க.பொ.த.(சா/த)பரீட்சை சுமுகமான நிலையில் நடாத்தப்படுகிறது

## பரீட்சை ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் ஆரம்பமான க. பொ.த (சாதாரண தரம்) பரீட்சை சுமுகமான நிலையில் இடம்பெற்றதாக பரீட்சைகள் ஆணையாளர்அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

பரீட்சை முடியும்வரை பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார். இந்தப் பரீட்சைக்கு பாதுகப்புப் படையினரிடம் சரணடைந்த 182 முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்கள் தோற்றுகின்றனர்.

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் இவர்களுக்குரிய பரீட்சை நிலையம் அமைக்கப்பட்டிருந்ததென வன்னி மாவட்ட மேலதிக கல்விப்பணிப் பாளர் பி.அரியரத்தினம் தெரிவித்தார்.

வவுனியாவில் மொத்தமாக 6 ஆயிரத்து 953பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். 58 நிலையங்களில் பரீட்சைகள் எந்தவித அசம்பாவிதங்களுமின்றி நடைபெற்று வருகின்றதென தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இடம் பெயர்ந்த 706 பேர் காமினி வித்தியாலயத்தில் உள்ள ஏழு நிலையங்களில் பரீட்சைக்குத்தோற்றினார்கள். (ஸ்ரீ-2)

# மனைவி, பிள்ளைகளை வெட்டிக்கொன்ற இராணுவச் சிப்பாய் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

பதவிய மைத்திரிபுர பிரதேசத்தில் மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளை வெட்டி படுகொலை செய்த இராணுவ சிப்பாய் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்தப் படுகொலைச் சம்பவம் இடம்பெற் றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மனைவியையும் மகளையும் மற்றும் அயல் வீட்டு சிறுவன் ஒருவனையும் குறித்த இராணுவச் சிப்பாய்படுகொலை செய்துள் ளதாக குறிப்பிடப்படுகி றது.

இப்படுகொலை சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய ராஜாங்கன பொலிஸாரிடம் தாம் படுகொலைகளை மேற்கொண்டதாக குறித்த இராணுவச் சிப்பாய் ஒப்புக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படும் அதே வேளை படுகொலைச் சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் குறித்த இராணுவச் சிப்பாய் கெக்கிராவ இராணுவ முகாமில் கடமையாற்றி வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்படும் சந்தர்ப்பம் வரையில் அவர் இராணுவத்தில் தொடர்ந்து கடமையாற்றி வந்ததாக குறிப்பிடப்படுகிறது.

குடும்ப பிணக்குக் காரணமாக இந்தப் படுகொலைகளைமேற்கொண்டதாக குறித்த இராணுவச்சிப்பாய் ஒப்புக்கொண்டுள்ளார். (ஸ்ரீ-4)

# விடுதலைப்புலிகளை வெளிநாட்டுக்கு அனுப்பிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

(கொழும்பு)

விடுதலைப்புலி உறுப்பினர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த நபர் ஒருவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பைச் சேரந்த மகேந்திரன் ரவீந்திரன் என்பவரே அவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர் ஆவார். கடந்த 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை ஆயிரக்கணக்கான விடுதலைப்புலி உறுப்பினர்களை இவர் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2009 ஆம் வருடம் ஒரே நிறுவனத்திலிருந்து மாத்திரம் அவர் நான்கரைக்கோடி ரூபாவுக்கு விமான டிக்கற்றுக்களை கொள்வனவு செய்திருந்தார்.

அந்நிறுவன அதிகாரிகளுக்கு ஏற்பட்ட சந்தேகத்தின் காரணமாக பொலிஸாருக்கு கொடுக்கப்பட்ட தகவலையடுத்து ரவீந்திரனை கைது செய்ய முயன்றபோது அவர் பாங்கொக் சென்று தலைமறைவாகியுள்ளார்.

அவ்வாறான நிலையில் கடந்த மாதம் பாங்கொக்கில் நடத்தப்பட்ட தேடுதல் வேட்டையின் போது சிக்கிக் கொண்ட அவரும் நாடு கடத்தப்பட்டிருந்த நிலையில் தற்போது பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. (ஸ்ரீ-2)

# பணமோசடி செய்து தப்பிச் சென்ற இந்தியர்களை கைது செய்வதற்கு இந்திய பொலிஸாரின் உதவி


(கொழும்பு)

கண்டி இராஜ வீதியில் உள்ள கட்டடம் ஒன்றில் சன்லங்கா என்ற பெயரில் பிரமிட் முறையிலான நிறுவனம் ஒன்றை நடத்தி 500க்கும் மேற்பட்ட இலங்கையர்களிடம் பெறப் பட்ட 10 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்துடன் தப்பிச் சென்ற இரண்டு இந்தியர்களை கைது செய்வதற்காக கண்டி பொலிஸார் இந்திய பொலிஸாரின் உதவியை நாடியுள்ளனர்.

தப்பிச் சென்றுள்ள இந்தியர்களை கைது செய்வதற்காக கண்டி பொலிஸ் சர்வதேச பிடிவிராந்தை பெற்றுள்ளது. சந்தே நபர்களை கைது செய்வது தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகராலயம் மூலம் இந்திய பொலிஸாரின் உதவி பெறப்படவுள்ளது.

இறுவட்டுகளை வழங்கி ஆவணங்களை மொழி பெயர்க்கும் வேலைத்திட்டம் மூலம் இந்தப் பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் கண்டி உள்ளிட்ட பல பகுதிகளை சேர்ந்த 550க்கும் மேற்பட்டவர்கள் சந்தேக நபர்களுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தியர்கள் நடத்திய நிறுவனத்தில் பணியாற்றிய இலங்கையைச் சேர்ந்த 9 பேர் ஏற்கனவேகைதுசெய்யப்பட்டுள்ளனர். இராமகிருஷ்ணன் சுந்தரம், சரவணன்வீரகுமார் ஆகிய இந்தியர்களே இந்த பண மோசடியில் ஈடுபட்டு, நிறுவனத்தை மூடி விட்டு தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)



விளையாட்டமைச்சினால் கண்டியில் நடத்தப்பட்டதேசிய குத்துச்சண்டைப் போட்டியில் யாழ். குத்துச்சண்டை சங்கத்தைச் சேர்ந்த பருத்தித்துறை எஸ்.கதிரவன் (52கிலோ) மற்றும் தொண்டைமானாறு செந்தில்நாதன் (62கிலோ) ஆகிய இருவரும் வெண் கலப் பதக்கங்களை பெற்றுக் கொண்டனர்.

# வகுப்புத் தடையை நீக்குமாறு கோரி கிழக்கு பல்கலை மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாகத்தினர் 14 மாணவர்களுக்கு விதித்துள்ள வகுப்புத் தடையை நீக்கக் கோரி அந்த பல்கலைக்கழகத்தில் பயிலும் சிங்கள மாணவர்கள் நேற்று முன்திணம் காலை ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு வந்தாறுமுலையில் உள்ள பல்கலைக்கழகத்திற்கு எதிரில் நடைபெற்றது. தமது கோரிக்கை நிறைவேற்றப்படா விட்டால் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்க போவதாக மாணவர்கள் எச்சரித்துள்ளனர்.

இது குறித்து கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி பிரேம்குமாரிடம் கேட்ட போது பகிடிவதை சம்பந்தமாக 7 தமிழ் மாணவர்களுக்கும் 7 சிங்கள மாணவர்களுக்கும் வகுப்புத் தடை விதிக்கப்பட்டதாக தெரிவித்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் எந்த முன்னறிவிப்புமின்றி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் உபவேந்தர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்கொய்தா அமைப்பின் முக்கிய புள்ளிகள் உட்பட 200 பேர் கைது



(பக்தாதி)

அல்கொய்தா பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த 200 பேர் பல்வேறு நாடுகளில் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் சவுதி அரேபியாவில் மட்டும் 149 பேர் கைதாகினர்.

இந்தக் கைது வேட்டை காரணமாக அல்கொய்தா பலமிழந்து வருவதாக ஈராக் உள்துறை அமைச்சர் ஜவாத் அல் போலானி தெரிவித்துள்ளார்.

கடந்த சில வாரத்தில் மட்டும் 29 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டுள்ளதாக அவர் கூறினார். போலானி மேலும் கூறுகையில்,

இந்தப் பயங்கரவாதிகள் பலரின் கையடக்கத் தொலைபேசி உரையாடலின் போது இடைமறித்து கேட்ட போது அல்கொய்தா அமைப்பின் சதிச் செயற்திட்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதன் மூலம் மேலும் பல தற்கொலைப்படை தாக்குதல் தடுத்து நிறுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது . கைதானவர்களில் பலர் அந்த அமைப்பின் முக்கிய புள்ளிகள் மற்றும் மனித வெடிகுண்டுகளும் ஆவர்.

கடந்த ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற திடீர் சோதனை நடவடிக்கையில் இந்த அமைப்பின் முக்கிய தலைவர்களான அப அயூப் அல்மசூரி, அபு ஓமர் அல் பாக்தாதி ஆகியோர் கொல்லப்பட்டனர் என்று அவர் கூறினார்.

கைது செய்யப்பட்டவர்களை செம்மஞ்சள் நிற பனியன் அணிந்தபடி பத்திரிகையாளர்கள் முன்பு நிறுத்தி காட்டினார். கொல்லப்பட்ட முக்கிய புள்ளிகள் இடத்தில் மாற்று நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுவிட்டனர் என அல்கொய்தாவுடன் தொடர்புடைய இணையத்தளத்தில் கூறப்பட்டுள்ளது.

சவுதி அரேபியா உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

கடந்த சில மாதங்களில் 149 அல் கொய்தாவினரை கைது செய்துள்ளதாக கூறியுள்ளது.

இதில் ரஷ்யாவில் 8 பேரும் ஏமனில் 12 பேரும் ஸ்பெயினில் 7 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ)

## விக்கிலீக்சுக்கு போட்டியாக புதிய இணையத்தளம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் அந்தரங்கங்களை அம்பலத்தில் ஏற்றி அலறவைத்தது விக்கிலீக்ஸ் இணையத்தளம்.

தற்போது அதன் தலைவர் ஜுலியன் அசேஞ் கம்பிகளுக்குப் பின்னால் இருக்கிறார். இன்வெஸ்டிகேடிவ் ஜேர்னலசிம் என்ற பெயர் பெரும் புரட்சியை விக்கிலீக்ஸ் ஏற்படுத்தியுள்ளது.

விக்கிலீக்ஸ் தலைவர் அசேஞ்சின் வலது கரமாக இருந்தவர் டேனியல் டோஸ்சிட். இவர் தான் தற்போது விக்கிலீக்சுக்கு போட்டியாக அதே பாணியில் இரகசியங்களை வெளிக்கொணர வைக்க புறப்பட்டிருக்கிறார். ஓபன்லீக்ஸ் என தனது இணையத்துக்கு புதிய பெயரிட்டுள்ளார். இதன் சேவையானது எதிர்வரும் 2011 இல் தொடங்கும் என தெரிகிறது. (ஸ்ரீ-2)




## கர்ப்பிணிகளின் கைத்தொலைபேசி பாவனை குழந்தையை பாதிக்கும் ஆய்வில் தகவல்

(வோஷிங்டன்)

கர்ப்பமடைந்த பெண்கள் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்தினால் அவர்களின் குழந்தைகள் முரட்டுத்தனம் கொண்டவர்களாக மாறும் வாய்ப்பு உள்ளது என அமெரிக்க விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

கையடக்கத்தொலைபேசி குழந்தைகள் நலனுக்கும் உள்ள தொடர்பு பற்றி அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலை பேராசிரியர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வில் 7 வயதான 28 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்களும் அவர்களின் பெற்றோரும் கலந்துகொண்டனர். அதே போல் 1996 முதல் 2002 வரை கர்ப்பமடைந்த பெண்கள் பற்றியும் விபரங்கள் சேகரிக்கப்பட்டன.

ஒரு இலட்சம் பேரிடையே நடத்தப்பட்ட ஆய்வின் முடிவில் கர்ப்பமடைந்த பெண்கள் தொடர்ச்சியாக கைத்தொலைபேசி பயன்படுத்தினால் அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனர் என தெரியவந்துள்ளது.

ஆய்வில் பங்குபெற்ற 3 சதவீத குழந்தைகள் வழக்கத்திற்கு மாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். சில சமயம் முரடர்கள் போல் நடந்து கொண்டனர். உடல் பருமன், எளிதில் உணர்ச்சி வசப்படுதல் போன்ற பாதிப்புகளையும் கொண்டிருந்தனர்.

இதற்கு சிறுவர்களின் தாய் கர்ப்பமாக இருந்த காலத்தில் தொடர்ச்சியாக கையடக்கத்தொலைபேசி பயன்படுத்தியது தான் காரணம் என தெரிய வந்துள்ளது. (ஸ்ரீ-4)

## அமெரிக்கத் தூதுவர் ரிச்சட்கோல்புருக் மரணம்

(வோஷிங்டன்)




ஆப்கான் மற்றும் பாகிஸ்தானுக்கான அமெரிக்கச் சிறப்புத் தூதர் ரிச்சர்ட் கோல் புருக் உடல் நலக்குறைவால் மரணமடைந் தார். இறக்கும் போது இவருடைய வயது 69 ஆகும்.

கடந்த 10ஆம் திகதி வெளியுறவுத்துறை கூட்டம் ஒன்றின்போது கோல்புருக்குக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. இந்த அறுவைச் சிகிச்சைக்குப்பின் அவர் உயிரிழந்ததாக அமெரிக்க ஊடகங்கள் தெரிவித்தன. (ஸ்ரீ-2)

## தென்கொரியக் கப்பல் மூழ்கி ஐந்து பேர் உயிரிழப்பு

(பீஜிங்)



தென்கொரிய மீன்பிடிக் கப்பல் அண்டாட் டிக் பெருங்கடலில் மூழ்கியதில் 5 பேர் உயிரி ழந்தனர். அக் கப்பலில் பயணம் செய்த சுமார் 17 பேரைக் காணவில்லை. அத்துடன் 20 பேர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து தென்கொரிய அதிகாரிகள் கூறுகையில், தென்கொரியாவிலிருந்து 614 தொன் எடையுள்ள மீன் பிடிக்கப்பல் ஒன்று அண்டாட்டிக் பெருங்கடல் பகுதியில் மீன் பிடிப்பதற்காகச் சென்றது. இதில் தென் கொரியா, சீனாவைச் சேர்ந்த தலா 7 பேர், வியட்நாம், இந்தோனேசியாவைச் சேர்ந்த தலா 11 பேர், பிலிப்பைன்ஸ் நாட்டவர் 3 பேர், ரஷ்யாவைச் சேர்ந்த ஒருவர் உட்பட 42 பேர் பயணித்தனர்.

கடந்த 12 ஆம் திகதி இரவு அண்டாட்டிக் பெருங்கடல் பகுதியில் இந்தக்கப்பல் திடீரென மூழ்கியது. இதனால் கப்பலில் இருந்தவர்கள் கடலில் வீழ்ந்து தத்தளித்தனர்.

அப்போது அப்பகுதியில் மற்றொரு கப்பலில் வந்து மீன் பிடித்துக் கொண்டிருந்த வேறொரு குழுவினர் கப்பல் மூழ்குவதைப் பார்த்து அங்கு விரைந்து கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தவர்களை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.


எனினும், அவர்களால் 20 பேரை மட்டுமே மீட்க முடிந்தது. 5 பேரது உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. 17 பேரைக் காணவில்லை. அப்பகுதியில் தீவிர தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். கப்பல் எவ்வாறு மூழ்கியது என்பது தெரியவரவில்லை. எனினும், அப்பகுதியில் தொடர்ந்து பலத்த காற்று வீசி வருகிறது. இதனால் மீட்புப் பணிகளும் பாதிக்கப்பட்டுள்ளன. மீட்புப் பணிக்கு உதவுமாறு நியூசிலாந்து அரசிடம் தென்கொரியா உதவி கேட்டுள்ளது. (ஸ்ரீ-2)



கொசோவா நாட்டில் நடந்த பொதுத் தேர்தலில் ஜனநாயக கட்சியின் தலைவரும் தற்போதைய பிரதமருமான ஹாஸ்ஹிம் தட்சி வெற்றி பெற்று மீண்டும் பிரதமராக பொறுப்பேற்கவுள்ளார். தலைநகர் பிரிஸ்டினா நகரில் நடந்த பொதுக்கூட்டத்தில் தனது ஆதரவாளர்களை பார்த்து கையசைப்பதை படத்தில் காணலாம்.

## விக்கிலீக்ஸ் நிறுவுனர் அசேஞ்சை விசாரிக்க துடிக்கும் அமெரிக்கா

(ஸ்டாக்ஹோம்)



பென்டகன் என்னை விசாரிக்க வேண் டும் என்று பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. இதனால் சுவீடன் நாட்டு நீதி முறைகேடாகப் பயன்படுத்தப்படும் என நான் மனமுடைந்து போயிருக்கிறேன் என்று விக்கிலீக்ஸ் நிறுவுனர் ஜுலியன் அசேஞ்ச் தெரிவித்துள்ளார்.

தற்போது இவர் பிரிட்டன் சிறையில் உள்ளார். அவர் மீது சுவீடனில் இரு பெண்கள் தங்களைப் பாலியல் பலாத்காரம் செய்ததாக புகார் தெரிவித்துள்ளனர். இதையடுத்து சுவீடனுக்கு அவரைக் கொண்டு போவதை எதிர்த்து அசேஞ்ச் வாதாடி வருகிறார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் சுவீடன் நாட்டு தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டி வழங்கிய நான் சுவீடனுக்கு அடைக்கலம் தேடி வந்த ஒரு பதிப்பாளர். அமெரிக்க இராணுவ மையமான பென்டகனை எதிர்த்துப் பெரியளவில் ஆவணங்களை வெளியிட்ட பின் என்னிடம் எப்படியாவது விசாரித்து விட வேண்டும் என அவர்கள் முயன்று வருகின்றனர்.

இதனால் நான் மகிழ்ச்சியற்ற நிலையில் மனமுடைந்து போயிருக்கிறேன். சுவீடன் நாட்டு நீதி எவ்விதம் தவறாக, முறைகேடாக பயன்படுத்தப்படுமோ என்று கவலை அடைந்திருக்கிறேன் என அசேஞ்ச் கூறினார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாசத்தை வைத்து பலன் சொல்லலாம்...



ஜாதகத்தில் பாக்யாதிபதி குரு பகவான் மற்றும் கேது பகவான் பலமாக இருந்தால் ஞானத்தில் அதிக நாட்டம் உண்டாகும். கேது தசை, குரு பகவான் தசை மற்றும் சந்திர தசைகளில் பொதுவாக ஆன்மீக நாட்டங்கள் உண்டாகும். கிரகங்கள் பலத்திருக்க அதில் வெற்றியும் கிட்டும்.

வலது மூக்கின் வழியாக வரும் சுவாசத்தை பிங்க்ள என்றும் இடது மூக்கின் வழியாக வரும் சுவாசத்தை இடகலை என்றும் அழைப்பார்கள். இதையே சூரிய, சந்திர கலைகள் என்றும் பெயரிட்டு அழைப்பார்கள். ரேசக, பூரக, கும்பக முறைப்படி பிராணாயாமம் செய்து சுவாசத்தைக் கவனிப்பவர்களுக்கு வாக்கு பலிதம் கைவரக்கூடும்.

மேலும், உடலில் தோன்றக் கூடிய வியாதிகளையும் காலநேரம் அறிந்து நிவர்த்தி செய்து கொள்ள முடியும்.

இடது பக்கம் சுவாசம் வரும் காலம் ஆபரணங்கள் அணியவும், வெளிநாட்டு பயணங்களுக்கும், நூதன வீடு கட்டுவதற்கும், குளம், கிணறு போன்ற நீர் நிலைகளைத் தோன்ற வைப்பதற்காகவும், இஷ்ட தெய்வங்களை விக்கிரக வடிவில் பிரதிர்ஷ்டை செய்யவும், நீண்ட பயணத்திற்கு ஏற்றதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

வலது நாசியில் சுவாசம் வரும் காலத்தில் பிரச்சினைக்குரிய காலங்களை செய்து முடிப்பதும், நூதன வித்தைகளை கற்பதும், விரோதிகளை நட்பாக மாற்றுவதும், புதிய வித்தைகள் கற்பதும், வாகனங்கள் ஓட்டப் பழகுவதும் உயர்வை உண்டு பண்ணும்.

நல்ல குரு கிடைத்தால் சாயா புருஷ தரிசனத்தையும் முறையாகப் பயிற்சி செய்யலாம்.

12 வருடம் பயிற்சி எடுப்பவருக்கு அவருடைய நிழல், அவருடன் பேசவும், அவரது எதிர்காலப் பயனை மற்றும் அவரது ஆயுள் காலத்தைப் பற்றியும் எடுத்துரைக்கும் என்று கூறுவார்கள்.

முறையாக சூரிய சந்திர கலைகளைப் பயில்வோருக்கு ஆன்ம இலாபமும் கிடைக்கும்.

பிராணாயாமங்கள் செய்யும் கால அளவுகளையும், குரு முகமாகக் கற்பது நல்லது.

சுவாசப் பயிற்சி பலவிதமாக உள்ளதால் தேவைக்கேற்ப அறிந்து கொள்ளலாம்.

மந்திர பூர்வமாக பிராணாயாமங்கள் செய்யும் போது தரையில் இருந்து சரீரம் மேல் எழுந்து நிற்கும். இவ்வித பயிற்சி பெற்றவர்கள் நேபாளம், திபெத் போன்ற இடங்களிலும், இமயமலைச் சாரல்களிலும் உள்ளனர் என்று சொல்லப்படுகிறது.

அந்தக் காலத்தில் மகரிஷிகள் இவ்வித சித்தி பெற்றதால் பிரணவ தேகத்தை அடைந்ததாக கூறுவார்கள்.

சுவாசப் பயிற்சியில் தேர்ச்சிப் பெற்றவர்கள் தங்களிடம் மற்றவர்கள் சந்தேகங்களை கேட்க வருகையில், நமக்கு வலது பக்கம் வந்து கேள்வி கேட்க, இடது நாசியில் சுவாசம் உண்டானால் சுப ஜெயம், சிறிய பிரயத்தினத்திற்கு பிறகு உண்டாகும் என்று கூறுவார்கள்.

கேள்வி கேட்பவர் இடது பக்கம் வந்து, அதன்பின் அமர்ந்து கேள்வி கேட்க, நமக்கு இடது நாசியிலே சுவாசம் உண்டானால் காரியம் நிச்சயமாக நிறைவேறும் என்று கூறலாம்.

கேள்வி கேட்பவர் நமக்கு இடது நாசியில் சுவாசம் வரும்போது நேராக வந்து கேட்டால் காரியம் ஜெயம் என்றும் கூறலாம்.

அதேநேரத்தில், ஆகாசவாணியாக தடை வார்த்தைகளான நில், ஜாக்கிரதை, வீண், கவனம், அவசரப்படாதே போன்ற ஒலிகள் கேட்டால் பலனை வந்தவருக்கு யோசித்துக் கூற வேண்டும்.

இந்த சூரிய சந்திர கலையாகிய பிராணாயாமத்துடன் யோகாசன அப்பியாசங்களும், பெரும் உதவியாக இருக்கும்.

மிதமாக உண்ணுதல், பதற்றமின்மை, குருபக்தி, எல்லா ஜீவ இராசிகளையும் நேசிக்கும் பண்பு, அன்னம், உணவு, நீர் இவற்றை மற்றவர்களுக்கும் பகிர்ந்து அளிக்கும் எண்ணம் போன்றவை கொண்டு சித்தம் தெளிந்தவருக்கு ஆன்ம பலத்தால் சொல் பலிதமும், ஆன்ம தரிசனமும் எளிதில் கிட்டும்.

சூரிய சந்திர கலை அறிதல் மிக விரிவான இரகசியம் என்பதால் அதிகம் இவ்விடம் கூறப்படவில்லை. தக்க குருவின் உதவியால் இக்கலையை பயில்வது நன்மை தரும்.




# பிரான்சில் பிணைக்கைதிகளாக பிடிக்கப்பட்ட 20 குழந்தைகள் மீட்பு

பிரான்ஸ் நாட்டின் கிழக்குப் பகுதியில் பெசன்கன் என்ற இடம் உள்ளது. இங்கு 4 வயது முதல் 6 வயது வரையிலான குழந்தைகள் படிக்கும் முன்பள்ளி ஒன்று உள்ளது.

நேற்று முன்தினம் காலை அங்கு சுமார் 17 வயது மதிக்கத்தக்க இளைஞன் கையில் 2 வாள்களுடன் புகுந்தான். ஒரு வகுப்பறைக்குள் நுழைந்த அவன் அங்கு படித்துக் கொண்டிருந்த 20 குழந்தைகள் மற்றும் ஆசிரியை ஒருவரையும் வாள் முனையில் சிறை பிடித்தான்.

இதனால் அங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது. இது பற்றிய தகவல் குழந்தைகளின் பெற்றோருக்கு தெரிவிக்கப்பட்டது. உடனே அவர்கள் பாடசாலையின்முன் கூடி விட்டனர். இதற்கிடையே தகவல் அறிந்த பொலிஸாரும் பாடசாலையை முற்றுகையிட்டனர்.பின்னர் வாள்களுடன் புகுந்த மர்ம இளைஞருடன் கையடக்கத் தொலைபேசியில் பேசினர். எதற்காக இப்படி நடந்து கொண்டாய். உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டனர்.

ஆனால், அவன் எதுவும் தெளிவாக கூறவில்லை. இதற்கிடையே சுமார் 4 மணி நேரம் அவனுடன் பேசி சமாதானப்படுத்தினர். இதைத் தொடர்ந்து அவன் 14 குழந்தைகளை விடுவித்தான். பின் நள்ளிரவு ஒரு மணியளவில் மீதி இருந்த 6 குழந்தைகள் மற்றும் ஆசிரியர் மீட்கப்பட்டனர்.

அதைத் தொடர்ந்து பெற்றோரும் பாடசாலை நிர்வாகிகளும் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

வாளுடன் நுழைந்த நபர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றும் டாக்டரிடம் சிகிச்சை பெற்று வருவதாகவும் கல்வித்துறை மந்திரி லக்காடெல் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# கேபிள் தொலைக்காட்சி சேவை வழங்குநர்களுக்கான அறிவித்தல்

யாழ். குடாநாடு முழுவதும் தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் கேபிள் தொலைக்காட்சி சேவை வழங்குநர்கள் தாங்கள் தங்களுடைய தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கான கேபிள் விநியோகங்களை எமது இலங்கை மின்சாரசபையின் மின்விநியோக மார்க்கங்களிலுள்ள மின்விநியோகத் தூண்களிலேயே தொலைக்காட்சி கேபிள்களை பொருத்தி விநியோகம் செய்து வருகிறீர்கள். இதனால் எமது மின் விநியோக மார்க்கங்களின் பராமரிப்பு வேலைகளுக்கு இவை பெரிதும் இடையூறாக இருப்பதால் தங்களுடைய இத்தொலைக்காட்சிக் கேபிள்களை இன்னும் இரண்டு வாரங்களுக்குள் அப்புறப்படுத்தி எமது பராமரிப்பு வேலைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு கேட்டுக் கொள்கிறோம். தவறும் பட்சத்தில் அவற்றை அகற்றுவதற்கு எம்மால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

மின் பொறியியலாளர்
யாழ். பிரதேசம்,
14.12.2010

மின் பொறியியலாளர்
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.

சி/1825

# புலிகளுடன் கடைசி வரை இருந்த மருத்துவர்கள் நீதிமன்றத்தால் விடுதலை

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது புலிகளுடன் கடைசி வரை தங்கியிருந்த மருத்துவர்கள் இருவரும் நேற்று நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.


கிளிநொச்சியின் முன்னாள் சுகாதாரப் பணிப்பாளர் ட. சத்தியமூர்த்தி மற்றும் கந்தசாமி துரைகேதீஸ் ஆகிய மருத்துவர்களே அவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

புலிகளின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு நல்கிய குற்றச் சாட்டின் பேரில் கடந்த 2009 ஆம் ஆண்டு மேமாதம் 16 ஆம் திகதி அவர்கள் இரகசியப் புலனாய்வுத்துறையால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அரசாங்கத்தால் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட மருந்து வகைகளை புலிகளுக்கு வழங்கியமை, மோதல்கள் இடம்பெற்ற காலப்பகுதியில் இராணுவத்தினரை அபகீர்த்திக்குள்ளாக்கும் கருத்துக்களை சர்வதேச ஊடகங்களுக்கு வழங்கியமை போன்ற குற்றச்சாட்டுகளும் அவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்தன.

அதன்பின் அதே வருடம் ஓகஸ்ட் 24 ஆம் திகதி அவர்கள் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தாலும் அவர்களுக்கெதிரான வழக்கு தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வந்தது.

ஆயினும் அவர்களுக்கெதிரான வழக்கை தொடர்ந்து முன்னெடுக்க போதுமான சாட்சியங்கள் இல்லை என்று சட்ட மா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்துக்கு அறிவித்ததையடுத்து மருத்துவர்கள் இருவரும் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்பட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. (ஸ்ரீ-3)



நல்லூர் பிரதேச செயலகத்தில் இயங்கும் பொலிஸ் திணைக்களப் பிரிவினால் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது தொடர்பான விசாரணைகள் நேற்று கொக்குவில் பிரதேசத்தில் உள்ள சந்தைப்பகுதியில் இடம் பெற்றது. சிறுவன் ஒருவனிடம் சிரேஷ்ட தொழில் திணைக்கள உத்தியோகத்தர் ப.பிரதீபன் விசாரணைகளை மேற்கொள்வதை படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாய் தன் இனத்தை விரோதிக்கும் செயலை மனிதரிடம் கற்றுக்கொண்டது. ~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தமிழர்களின் விரோதிகளாக தமிழர்களே இருக்கின்றனர்

பொதுவில் சிங்களவர்கள் நல்லவர்கள் என்று நாம்கேள்விப்பட்டதுண்டு. தென்பகுதியில், அரசபணியில் ஈடுபட்ட தமிழர்கள், மற்றும் தென்பகுதியில் வர்த்தகம் செய்த தமிழர்கள் இவ்விதம் கூறிக்கொள்வர்.

சிங்களவர்கள் உதவி செய்வார்கள், மற்றவர்களுக்கு மதிப்பளிப்பது அதிகம், இரக்கம் காட்டுவார்கள் என்றெல்லாம் எம்மவர்கள் கூறக் கேட்ட நாம் நடைமுறையில் அதைக் காணவில்லையே என்று நினைப்பதும் உண்டு.

ஆனால், இப்போதுதான் நிலைமையைப் புரிந்து கொள்ள முடிகின்றது. அதாவது தமிழர்களாகிய நாம் இத்துணை துன்ப துயரங்களுக்கு ஆளாகியதற்கு சிங்களவர்களை விட தமிழர்களே அதீத பங்காற்றினர் என்பது புலப்படுகின்றது.

சிங்களவர்கள் தமிழர்களுக்கு ஏதேனும் கொடுப்போம் என்றாலும் அதற்கு தமிழர்கள் விடமாட்டார்கள் போல் தெரிகின்றது.

திருமதி சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது இனப்பிரச்சினையை பயங்கரவாதப் பிரச்சினையாக சர்வதேச ரீதியில் பிரசாரம் செய்வதில் தமிழரான அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரே முக்கிய பங்காற்றினார்.

அவர் நினைத்திருந்தால் தமிழர்களின் பிரச்சினைக்கு ஏதோவொரு வகையில் தீர்வு காண்பதற்கு வழிசெய்திருக்க முடியும்.

இதுபோல விடுதலைப்புலிகளின் தோல்வி கூட விடுதலைப்புலிகளோடு சேர்ந்திருந்தவர்கள் வழங்கிய தகவல்கள், காட்டிக்கொடுப்புகள் என்பவற்றால் ஏற்பட்டதே.

விடுதலைப்புலிகளோடு இருந்து தாக்குதல்களை நடத்தியவர்கள், வெளிநாடுகளில் தமிழ் மக்களிடம் பணம் சேர்த்தவர்கள் திடீரென மாறினார்கள். அதன் முடிவு; பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் வன்னி யுத்தத்தில் பலியாகவேண்டியதாயிற்று.

அந்த இழப்புக்களோடு தமிழ் மக்களின் துயரம் நின்றாகவில்லை.

காலாகாலமாக, பரம்பரை பரம்பரையாகச் சேர்த்த சொத்துக்கள் அத்தனையும் பறிபோய்– பாழாய்ப் போய் இப்போது தறப்பாள்களின் கீழ்க் குந்தியிருக்கும் பரிதாபம்.

இவை விடுதலைப்புலிகளை அழிக்கவேண்டும் என நினைத்த தமிழர்களால் நேர்ந்த கதிதான் இது.

விடுதலைப்புலிகளை அழித்துவிட்டீர்கள். எதிர்காலத்தில் இலங்கை மண் அமைதி நிறைந்த பூமியாக இருப்பதற்காக தமிழர்களின் உரிமைப்பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள் என அரசை வலியுறுத்தும் பணியையாவது தமிழுக்கு விரோதமான தமிழர்கள் செய்வது அவசியமல்லவா!

இதைச் செய்யத் தவறும்போது அதற்காக வருந்த வேண்டிய காலம் விரைவில் ஏற்படும் என்பதை எவரும் மறந்துவிடலாகாது.

விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டனர். அவர்கள் இப்போது இல்லை. நிலைமை இதுவாக இருக்கும்போது தமிழர்களின் பிரச்சினைக்கு உரிய அரசியல் தீர்வை முன்வைக்க அரசுக்கு அழுத்தம் கொடுப்பதே அழகு.

அதை விடுத்து பெரும்பான்மை இனத்திற்காக அர்ச்சனை செய்வது– அவர்கள் விரும்பும்படியாகப் பேசுவது எல்லாம் சொந்த இனத்திற்குச் செய்யும் துரோகத்தனமாகும்.

# கிளிநொச்சியில் புதிய கற்கை நெறிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபையால் புதிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இயங்கும் தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபையின் கிளிநொச்சி பயிற்சி நிலையத்தில் வீட்டுமின் இணைப்பு, அலுமினி யப் பொருத்துகை, தையல் பயிற்சி நெறி, சிகை அலங்காரம் ஆகிய நான்கு கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் தை மாதம் 3 ஆம் திகதிக்கு முன்னதாக தேசிய தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கிளிநொச்சி பயிற்சி நிலையத்திற்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(ந-3,30)

# கிளி.மாவட்டத்தில் 17 பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன

## கிளிநொச்சி அரச அதிபர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 17பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன. இம் மாவட்டத்தில் உள்ள கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலுள்ள 17 பாடசாலைகளே மீள இயங்கவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 84 பாடசாலைகள் மீள இயங்கிவருகின்ற நிலையில் ஆயிரத்து 494 ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபட்டுள்ளதுடன் 26 ஆயிரத்து 649 மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர்.

இதேவேளை மீள ஆரம்பிக்கப்படாத 17 பாடசாலைகளின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்ததும் மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும், பூநகரி வாடியடிப் பகுதியில் உள்ள ஆசிரியர் விடுதியும் புனரமைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3,30)

# உலக வங்கியின் பணிப்பாளர் ஒகான்போ வட– கிழக்கு மாகாணங்களுக்கும் விஜயம்

இரண்டு நாள் விஜயமாக உலக வங்கியின் பணிப்பாளர் கலாநிதி நகோஷி ஒகான்போ எதிர்வரும் 17ம் திகதி இலங்கை வரவுள்ளார். இலங்கை மத்திய வங்கியின் 60வது ஆண்டு நிறைவை முன்னிட்டு அவரது விஜயம் அமைந்துள்ளது. உலக வங்கியின் பணிப்பாளர் தனது பயணத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து விசேட பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.



இதனைத் தவிர நிதியியல் துறையின் முக்கியஸ்தர்கள் சிலரையும் அவர் சந்திக்கவுள்ளார். இங்கு வரும் உலக வங்கியின் பணிப்பாளர் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளார். உலக வங்கியின் உதவியின் கீழ் அந்த மாகாணங்களில் இடம்பெற்று வரும் அபிவிருத்திப் பணிகளை அவர் பார்வையிட உள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ந-5)

# முகாம்களில் உள்ள மக்களுக்கு ரூபா. 45 மி. செலவில் உலருணவு

## மீள் குடியேற்ற அமைச்சர் தெரிவிப்பு

வடக்கு முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு 45 மில்லியன் ரூபாய் செலவில் உலர் உணவுப் பொருட்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மீள் குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய முகாம்களில் உள்ள மக்களுக்கு இப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

இம் மாதம் 18 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ள மீள் குடியேற்ற அமைச்சர் வீரக்கோன் மக்களை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடி அவர்களுக்கு இப் பொருட்களை நேரடியாக அவர்களின் கைகளிலேயே வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆறு நாட்கள் விஜயம் மேற்கொண்டு செல்லும் மீள் குடியேற்ற அமைச்சர், 10 ஆயிரம் பொதிகளைக் கொண்ட பருப்பு, மாவு, அரிசி, சீனி, பாய், தலையணை முதலான பொருட்களை வழங்கவுள்ளதாகத் தெரிவித்தார். (ந-5)

# ஐக்கிய தேசியக் கட்சியில் பிளவு இல்லை

## ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் வேண்டுமானால் மாறுபடலாம். ஆனால் கட்சியினுள் எதுவித பிளவுகளும் கிடையாது என கட்சியின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கருணாதிலக தெரிவித்துள்ளார்.

கட்சியின் தேசிய மாநாட்டைத் தொடர்ந்து கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவும் வெவ்வேறு இடங்களில் ஊடகவியலாளர் சந்திப்பு நடத்தியது தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

மேலும் 1975 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியிலிருந்த போது ஐக்கிய தேசியுக் கட்சி எவ்வாறு ஒரு தேசிய மாநாட்டை நடத்தி அதன் மூலம் பலம் அடைந்ததோ, அதுபோல தற்போது நடைபெற்ற தேசிய மாநாட்டின்பின் சிறிலங்கா சுதந்திரக்கட்சி மிகவும் பலமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இன்னும் 120 நாட்களில் கட்சியினுள் தேர்தல் இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

# சரிவில் இருந்து மீண்டுவரும் இத்தாலியின் பைசா கோபுரம்

உலக அதிசயங்களுள் ஒன்றான இத்தாலியின் பைசா நகரத்திலுள்ள சாய்ந்த கோபுரம் சுமார் 14 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எடையும் 183 அடி உயரமும் கொண்டது. இந்த கோபுரத்தின் வயது 838 ஆண்டுகள் ஆகும்.

ஆண்டு தோறும் உலகெங்கிலுமிருந்து 10 இலட்சம் சுற்றுலா பயணிகளை கவர்ந்து வரும் இந்தக் கோபுரம் தன்னிலையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக சாய்ந்து வருகிறது என்பது தான் பல நூற்றாண்டுகளாக உலக மக்களை கவலை அடைய செய்வதாக உள்ளது.

ஏழு அடுக்குகளை கொண்ட இந்தக் கோபுரம் வெறும் 10 அடி அத்திபாரத்தில் மட்டுமே அமைந்துள்ளது மட்டுமல்லாமல் இவ்வளவு எடையை தாங்கும் அளவிற்கு அந்த இடத்தின் மண் வலுவானதல்ல என்பதும்தான் இந்தக் கோபுரம் சாய்வதற்கான காரணங்களென்று கூறப்படுகிறது.

மேலும் மத்தியதரை கடலிலிருந்து வரும் உப்புக்காற்றும் மழைக்காலங்களில் ஏற்படும் மண் அரிப்பும் சேதத்தை அதிகப்படுத்தி வருகின்றன.

கோபுரம் சரிவதிலிருந்து காப்பாற்றுவதற்கு அந்நாட்டு அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது. யுனெஸ்கோ அமைப்பும் இந்தக் கோபுரத்தை பாதுகாக்கும் பணியை கடந்த 1989 ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டது. சுமார் 6 மில்லியன் பவுண்ஸ் செலவில் கோபுரம் சாய்விலிருந்து மீட்கப்படுகிறது.

கோபுரத்திற்கடியில் சேர்ந்துள்ள மண் மற்றும் கழிவுப் பொருட்களை லேசர் உளி மற்றும் சிறிய வகை ஊசிகளைப் பயன்படுத்தி நீக்கி வருகின்றனர்.

இதன்மூலம் கிட்டத்தட்ட 5.5 டிகிரி சாய்ந்திருந்த கோபுரம் மீட்கப்பட்டு தற்போது 3.9 டிகிரி சாய்வு நிலைக்கு நேர் செய்யப்பட்டுள்ளது. இந்த முயற்சி இன்னும் 200 வருடங்களுக்கு போதுமானது என்று இதன் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ள பொறியியல் வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



மரணம் நாளுக்கு நாள் நம்மை நெருங்கிக் கொண்டிருக்கிறது. சோம்பி இருக்கவேண்டாம். எது எது எப்பொழுது நடக்க வேண்டுமோ அது அது அந்த காலத்தில் நடந்தேறும் என்ற பொய்யான எண்ணத்தினால் சும்மா இருக்காதீர்கள்! அப்படி எதுவும் நடக்கப்போவதில்லை.

நம் வாழ்நாள் குறுகியது. நாம் ஆசைப்படும் உலகப் பொருட்கள் நிலையற்றவை. அழிந்துவி டும் இயல்புடையவை. ஆனால் தமக்காக வாழாது பிறருக்காக வாழ்பவர்களே உண்மையில் வாழ்பவர்கள் ஆவர். பிறரெல்லாம் வாழ்ந்தாலும் வீழ்ந்தவர்களே இறந்துபட்டவர்களே ஆவர்.

பிறரது உரிமையை மறுப்பவர்கள், உரிமையைப் பற்றிப் பேசவோ, உரிமையுடன் வாழவோ தகுதியுடையவர்கள் தானா? எனவே பயனற்ற கோபத்திலும் எரிச்சல் படுவதிலும் நமது சக்தியை வீணாக்காது அமைதியோடும் ஆண்மையோடும் செயலாற்றுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











யாழ்.பிரதேச கலாசாரப் பேரவை நடத்திய கலாசார விழா-2010 நேற்று யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நட்னம் இடம்பெறுவதையும் யாழ். உதவிப் பிரதேச செயலாளரும் நிகழ்வின் தலைவருமான திருமதி சுலோஜனி குகன், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி சு.விஜயரத்தினம் ஆகியோர் உரையாற்றுவதையும் திருமறைக் கலாமன்ற கலைத்தூது கல்லூரி மாணவிகளின் கும்மி நடனம் இடம்பெறுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# எதிர்க்கட்சியினர் புதிதாக மூன்று இணையத்தளங்களை ஆரம்பித்துள்ளனர்

ஐக்கிய தேசியக் கட்சியுடன் சம்பந்தப்பட்ட தரப்பினர் புதிதாக மூன்று இணையத்தளங்களை ஆரம்பித்துள்ளனர். இக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாகல ரத்நாயக்க அதுலதா என்ற இணையத்தளத்தை ஆரம்பித்துள்ளார்.

அதில் தற்போதைய செய்திகள், விளையாட்டு உள்ளிட்ட பல செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றன. இவ் இணைத்தளத்தின் ஆசிரியராக குணவர்த்தன செயற்பட்டு வரு கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவின் கண்காணிப்பின் கீழ் லங்காமிரர் என்ற இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மங்கள சமரவீரவின் ஊடகச்செயலாளர் ருவான் பெர்டினன்ஸ்னால் இந்த இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகச் செயலாளர் உள்ளிட்ட தரப்பினர் இந்த இணையத்தளத்தின் ஆசிரியர் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். இதனைத் தவிர சாத்கய என்ற பெயரிலும் எதிர்க்கட்சியினர் இணையத்தளமொன்றை ஆரம்பித்துள்ளனர். அதனை யார் இயக்குகின்றனர் என்று இதுவரை தகவல்கள் வெளியாகவில்லை. (ஸ்ரீ-2)

# இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டமையை கண்டித்து ஆர்ப்பாட்டம்

இலங்கை கடற்படையினரால் காரைக்காலைச் சேர்ந்த 4 மீனவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமையை எதிர்த்து திராவிட முன்னேற்ற கழகத்தின் புதுச்சேரி அமைப்பினர் இன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ள னர்.

கடந்த 4 ஆம் திகதி நாகபட்டினத்தின் ஜெகபதிப்பட்டினத்தில்இருந்து வடிவழகன், சுப்பிரமணி, சக்திவேல் மற்றும் சக்திக்குமார் ஆகிய 4 மீனவர்கள் கடலுக்குச் சென்றிருந்தனர்.

சீரற்ற காலநிலை காரணமாக அவர்கள் பயணித்த படகு நெடுந்தீவுக்கு வந்ததால் இலங்கை கடற்படையினரால் குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2-9)

# புலிகள் மீதான தடை நீக்கக் கோரிய வழக்கில் 3 வாரத்தில் பதிலளிக்க மத்திய அரசுக்கு உத்தரவு

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை சட்டவிரோத அமைப்பு என்று தீர்ப்பாயம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தொடர்ந்துள்ள வழக்கில் 3 வார காலத்தில் பதில் வழங்க மத்திய அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் மீதான தடையை மேலும் 2 ஆண்டு காலத்திற்கு நீடித்து மத்திய அரசு வெளியிட்ட அறிவிப்பை தீர்ப்பாயம் உறுதி செய்ததை இரத்து செய்ய கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எம். ஒய்.இக்பால், நீதிபதி சிவஞானம் ஆகியோர் அடங்கிய முதல் டிவிஷன் பெஞ்ச் முன்பு இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது நேரில் ஆஜராகி வாதிட்ட வைகோ சிவில் உரிமை சட்டத்தின் கீழ் தீர்ப்பாய விசாரணையில் பங்கேற்க அனுமதி கேட்டு மனு தாக்கல் செய்தேன். அதனை தீர்ப்பாயம் நிராகரித்து விட்டது. ஆனால் எனது கருத்துக்களை மட்டும் தீர்ப்பாயம் கேட்டது.

மத்திய மாநில அரசுகள் எனக்கு எதிராகவும் எனதுகட்சிக்கு எதிராகவும் கூறிய கருத்துக்களை ஏற்று தீர்ப்பாயம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இதனை மத்திய அரசும் தனது அரசிதழில் வெளியிட்டுள்ளது.

இதனால் எனது கட்சிக்கும் எனக்கும் அவப்பெயர் ஏற்பட்டுள்ளது. தீர்ப்பாய உத்தரவால் நான் பாதிக்கப்பட்டுள்ளேன். எனவே தீர்ப்பாய உத்தரவை இரத்து செய்ய வேண்டும் என்றார்.

அதற்கு தீர்ப்பாய உத்தரவால் பாதிக்கப்பட்டால் மத்திய அரசிடமே முறையிடலாம் என்று மத்திய அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர் தெரிவித்தார்.

ஆனால் மத்திய அரசிடம் சரியான நிவாரணம் கிடைக்காது என்று வைகோ பதில் கூறினார். அதனை தலைமை நீதிபதியும் ஏற்றுக் கொண்டார். இதற்கு மத்திய அரசை அணுகுவது சரியான தீர்வை தராது என்று குறிப்பிட்ட தலைமை நீதிபதி இந்த மனு குறித்து 3 வார காலத்துக்குள் பதில் வழங்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு உத்தரவிட்டார். (ஸ்ரீ-2)

# வனிதாவிடம் செல்ல மறுத்து தந்தையிடம் சென்றான் மகன்

(சென்னை)

நடிகர் விஜயகுமார், மஞ்சுளா தம்பதியின் மகள்நடிகை வனிதா ஆவார். இவருக்கும் பெற் றோருக்கும் இடையே கடந்த மாதம் தகராறு ஏற்பட்டது. ஒருவர் மீது ஒருவர் மதுரவாயல் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்தனர். இந் நிலையில் தனது மகன் விஜய் ஸ்ரீஹரியை முதல் கணவர் ஆகாஷ் கடத்திச் சென்று விட் டார். அவனை மீட்டு தரவேண்டும் என்று உயர் நீதிமன்றத்தில் வனிதா கடந்த வாரம் மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கை நீதிபதிகள் எலிப்பி தர்மராவ், அரிப்பரந்தாமன் ஆகி யோர் விசாரித்தனர்.

நேற்று விஜய் ஸ்ரீஹரியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த பொலிஸாருக்கு உத்தரவிட்டனர். அதன்படி விஜய் ஸ்ரீஹரியை தந்தை ஆகாஷ் நேற்று முன்தினம் அதே நீதிபதிகள் முன்பு ஆஜர்படுத்தினார். வனிதா 2 பெண் குழந்தைகளுடன் நீதிமன்றத்துக்கு வந்திருந்தார்.

ஆகாஷ் தரப்பில் சட்டத்தரணி இதயதுல்லா ஆஜராகி குழந்தை விஜய் ஸ்ரீஹரியை முதல் கணவர் ஆகாஷ் கடத்தி யதாக வனிதா கூறிய குற்றச்சாட்டுகள் முழு வதும் பொய்யானது. குழந்தையை ஆகாஷ் கடத்தவில்லை. கடந்த மாதம் விஜயகுமார் வீட்டில் குடும்ப சண்டை நடந்தது. விஜய குமார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டதாக பத்திரிகையில் செய்தி வந்தது. ஆகாஷ் வைத்தியசாலைக்குச் சென்று விஜயகுமாரை பார்த்தார். அதன் பின்னர் வனிதாவின் சம்மதத்துடன் குழந்தையை ஆகாஷ் அழைத்துச் சென்றார். குழந்தை தன்னிடமே இருக்க அனுமதி வழங்க கோரி குடும்ப நல நீதிமன்றத்தில் ஆகாஷ் மனுதாக்கல் செய்தார். இந்த மனு நாளை விசாரணைக்கு வருகிறது. இந்த பிரச்சினையை தீர்க்க குடும்பநல நீதிமன்றத்துக்கு மட்டும் தான் அதிகாரம் உள்ளது. எனவே இந்த வழக்கை இத்துடன் முடிக்க வேண்டும் என்று கூறி னார்.

வனிதா சார்பாக மூத்த சட்டத்தரணி ஸ்ரீராம் பஞ்ச் ஆஜராகி குழந்தையை ஆகாஷ் கடத்தி சென்றது உண்மைதான். குழந்தையின் படிப்புபாழாகிறது. சட்டப்படி குழந்தையை தாயிடம் ஒப்படைக்க வேண்டும். இந்த வழக்கில் விரிவாக வாதாட அவகாசம் வேண்டும் என்றார். இதை கேட்ட நீதிபதிகள் இந்த வழக்கு விசாரணையை நாளை தள்ளி வைக்கிறோம் என்று கூறி உத்தரவிட்டனர். உடனே வனிதா தரப்பில் ஆஜரான சட்டத்தரணி இந்த வழக்கு விசாரணை முடியும் வரை குழந்தை வனிதாவிடம் இருக்க அனு



மதி வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்.

இதற்கு ஆகாஷின் சட்டத்தரணி கடும் எதிர்ப்பு தெரிவித்தார். இதைத் தொடர்ந்து உயர் நீதிமன்ற பதிவாளர் ஜெனரல் அறையில் தங்க வைத்து குழந்தையைப் பார்க்கலாம் என்று வனிதாவிற்கு நீதிபதிகள் அனுமதி அளித்தனர். பதிவாளர் ஜெனரல் அறைக்கு குழந்தையை நீதிமன்ற அலுவலர் அழைத்துச் சென்றார். அங்கு சென்ற வனிதா என்னிடம் வா என்று குழந்தையை அழைத்தபடி கதறி அழுதார்.

உடனே நான், உன்னு டன் வரமாட்டேன் என்று குழந்தை விஜய் ஸ்ரீஹரி மறுப்புத் தெரிவித்தான். இதையடுத்து குழந்தையை ஆகாஷ் அழைத்து சென்றார். அறையை விட்டுவெளியே வந்த வனிதா சட்டப்படி குழந்தையை மீட்பேன் என்று நிருபர்களிடம் கூறினார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கணனிக் கடவுளின் படைப்பால்! ஒருதலை நாகம் பத்துத்தலையானது!

(யாழ்ப்பாணம்)

அண்மைக் காலத்தில் அதிகம் பேசப்பட்ட விடயம் 10 தலைநாக பாம்பு பற்றியது. வன்னிப் பகுதியில் இந்தப் 10 தலைநாகம் தென்பட்டதாகக் கூறிச் சில ஊடகங்களும் உண்மை நிலையை அறியாமல் செய்தியைப் பரப்பி மக்கள் மத்தியில் குழப்பத்தை உருவாக்கியிருந்தன.

இந்த 10 தலைநாகத்தின் புகைப் படங்கள் ஏற்கெனவே பல வாரங்களுக்கு முன்னர் இணையத் தளங்களில் உலா வந்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலையில் மீண்டும் அண்மையில் அந்த 10 தலைநாகத்தின் புகைப்படங்களை மக்கள் மத்தியில் பரப்பி விட்டமையால் அதை உண்மையென நம்பியவர்கள் அப்புகைப்படத்தைக் கத்தரித்துத் தங்களுடைய பூஜை





அறையில் வைத்து வழிபடுமளவுக்கு நிலைமை மாறியிருந்தது.

இந்நிலையில் 10 தலைநாகம் எனப் போலியாகச் சித்திரிக்கப்பட்ட உண்மையான ஒரு தலைநாகத்தின் புகைப்படமும் இப்போது இணையத்தில் வெளிவந்திருக்கிறது. ஒரு தலைநாகத்தின் புகைப்படத்திற்கு 10 தலை கொடுத்தவர்கள் கணனி விற்பன்னர்களே...!

ஏமாற்றமடைந்த வாசகர்களுக்கு உண்மை நிலை புரிய வேண்டும் என்பதற்காக 10 தலை நாகத்தின் கிரபிக்ஸ் விளையாட்டை இங்கே பிரசுரிக்கின்றோம். இப் படத்தில் ஒரு தலை நாகத்தின் பின்னால் அதனுடைய நிழல் அப்படியே இருக்கிறது. அதே படத்தை 10 தலைகளாக மாற்றிய போதும் அதே ஒரு தலை நாகத்தின் நிழல் தென்படுவதை வாசகர்களின் கவனத்திற்கு விடுகின்றோம். (ந-5)

# கைதடியில் மீளக் குடியமர்ந்த குடும்பத்தாரிடம் திருடர் கைவரிசை!

கைதடி வடக்கில் நேற்று பட்டப் பகலில் வீட்டின் ஓட்டைப் பிரித்து நுழைந்த திருடர்கள் அங்கிருந்து சுமார் 15 பவுண் தங்கநகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

வீட்டு உரிமையாளர் தோட்டத்திற்குச் சென்றிருந்த போது இத் துன்பகரத் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வன்னி யுத்தத்தில் பாதிக்கப் பட்டு மீளக் குடியமர்ந்த குடும்பம் ஒன்றிடமே திருடர்கள் தமது கைவரிசையை காட்டியுள்ளனர்.

இதேவேளை கடந்த 23 ஆம் திகதி இதேயிடத்தில் உள்ள வீடொன்றில் நுழைந்த திருடர்கள் சுமார் 26 பவுண் நகைகளைத் திருடிச்சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கைதடியில் வாடிக்கையாகத் தொடரும் இத் திருட்டுச் சம்பவத்தால் அப்பகுதி மக்கள் பெரிதும் விசனமடைந்துள்ளனர். (ந-5)

# கிரிக்கெட் சபை நிர்வாகக்குழு அங்கத்தவர்கள் இராஜினாமா

(கொழும்பு)

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் இடைக்கால நிர்வாகக் குழுவிலிருந்து சட்டத்தரணி காலிங்க இந்திரதிஸ்ஸவும் பிரபாத் பொன்சேகாவும் இராஜினாமாச் செய்துள்ளனர்.

புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படும் சந்தர்ப்பத்தில் இராஜினாமாச் செய்யும் சம்பிரதாயத்திற்கேற்ப, எனது இராஜினாமாக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளேன். கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையுடன் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை எனவும் காலிங்க இந்திரதிஸ்ஸ கூறினார்.

புதிய விளையாட்டுத் துறை அமைச்சர் விரும்புகின்றவரை நியமிப்பதற்கு வழிவிடுவதற்காக முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் சி.பி.ரத்னநாயக்காவால் நியமிக்கப்பட்ட பிரபாத் பொன்சேகாவும் இராஜினாமாக் கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார். (ந-5)

# 'ஸ்பொட் பிக்சிங்' விவகாரம் சல்மான் பட் புது விளக்கம்

(லண்டன்)

ஸ்கொட்லாந்துப் பொலிஸாரின் சோதனையின் போது தங்கியிருந்த அறையில் பிடிபட்ட பணத்திற்கு சல்மான் பட் புது விளக்கம் தந்துள்ளார்.

இங்கிலாந்து அணியுடனான லோர்ட்ஸ் டெஸ்டில் பாகிஸ்தான் வீரர்கள் சல்மான் பட், முகமட் ஆசிப், முகமட் ஆமீர் ஆகியோர் ஸ்பொட் பிக்ஸிங்கில் ஈடுபட்டது அம்பலமானது. இதையடுத்து வீரர்கள் அறையில் நடந்த சோதனையில் சல்மான் பட்டிடமிருந்து மட்டும் 21 இலட்சம் ரூபாய் பிடிபட்டதாகத் தகவல்கள் வெளியாகின.

இது குறித்து அவர் கூறியதாவது,

எனது அறையில் கைப்பற்றப்பட்ட பணம் குறித்து எல்லோரும் வேறுவிதமாகப் பேசுகின்றனர். ஆனால் இந்தப்பணம் எங்கிருந்து வந்தது என்று எனக்குத்தான் தெரியும். கிரிக்கெட் தொடரின் போது வீரர்களுக்கு போக்குவரத்துப்படி கொடுக்கப்படும் என்பது பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் (பி.சி.பி) எல்லோருக்கும் தெரியும்.

அதுவும் நீண்ட தொடர் என்பதால் இதற்கு மட்டும் எனக்கு 8 இலட்சம்ரூபாய் தரப்பட்டது. தவிர அணித்தலைவர் என்பதால் கூடுதலாக 3 இலட்சத்து 22 ஆயிரம் வழங்கினர். தெற்கு லண்டனிலுள்ள ஐஸ்கிறீம் பார்லர் திறப்புவிழாவுக்குச் சென்றதால் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் கிடைத்தது. அப்போது என்னுடன் முகமட் ஆமீரும் வந்தார். இதுவே என்னை இந்தப்புகாரிலிருந்து விடுவிக்க உதவும் என்று நம்புகிறேன்.


மீதமுள்ள பணம் எனது துடுப்பு மட்டையின் பின்புறம் ஸ்ரிக்கர் ஒட்டுவதற்காக கிடைத்த ஒப்பந்தம் மூலம்கிடைத்தது. இறைவன் அருளால் இந்தச் சிக்கலிலிருந்து விடுபட்டு நாங்கள் மூவரும் மீண்டும் தேசத்திக்காக கிரிக்கெட் விளையாடுவதில் தீவிரமாகவுள்ளோம். ஏனெனில் நாங்கள் கிரிக்கெட்டை மிகவும் நேசிக்கிறோம். இவ்வாறு சல்மான் பட் கூறினார்.

## விளையாட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சைல்ட் ப்ண்ட் அரச சார்பற்ற நிறுவனத்தின் ஏற்பாட்டில் வேலணை, ஊர்காவற்துறை, காரைநகர் இளைஞர் விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் துடுப்பாட்டம், உதைபந்தாட்டப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

இப் போட்டிகள் நாளை வியாழக்கிழமை வேலணை துறையூர் மைதானத்தில் நடைபெறுகின்றது. (ந-5)



சுவிஸ்சர்லாந்தில் நடைபெற்ற பெண்களுக்கான உலகக் கோப்பை பனிச்சறுக்குப் போட்டியில் வெற்றிபெற்ற மகிழ்ச்சியில் பிரான்சின் டெஸ்சா வோர்லி.

# தொடர் தோல்வியால் அதிருப்தி; மூத்த வீரர்கள் மீது விக்டோரி தாக்கு

(வெலிங்டன்)

இந்தியாவுக்கு எதிரான தொடரின் மிக மோசமான தோல்விக்கு மூத்த வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டமே காரணம் என நியூசிலாந்து அணியின் தலைவர் டானியல் விக்டோரி குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட நியூசிலாந்து அணி டெஸ்ட் (0:1) மற்றும் ஒருநாள் தொடரை (0:5) மோசமாகத் தோல்வி கண்டு நாடு திரும்பியது. தவிர, இந்தியாவுக்கு எதிரான தொடர்களில் இது அந்த அணிக்கு மிக மோசமான தொடராக அமைந்தது.

இது குறித்து அணியின் தலைவர் விக்டோரி கூறியதாவது.

இந்தியாவுக்கு எதிரான முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினோம். மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்டில் தோல்வியடைய, அது ஒருநாள் தொடரிலும் தொடர்ந்து விட்டது. இது எங்களை மிகவும் வேதனைப்படுத்திவிட்டது.

ஏனெனில் அனைத்து நியூசிலாந்து ரசிகர்களும் நாங்கள் வெற்றி பெறுவோம் என்று நினைத்து இருந்தனர். ஆனால் போட்டியின் முடிவுகள் வேறுமாதிரியாக அமைய, அவர்களை இது வெறுப்படையச் செய்து விட்டது.

இந்தத் தோல்விக்கு நான் உட்பட அணியின் மூத்த வீரர்கள் எல்லோரும் தான் பொறுப்பு. இப்போதைய நிலையில் எல்லோரையும் மன்னிக்க வேண்டும். அடுத்து, நமது கட்டமைப்பில் குறையா அல்லது வீரர்கள் தேர்வில் குழறுபடியா என்பது போன்ற காரணங்களை ஆராய வேண்டும். அனைத்து வீரர்களும் உலகக் கிண்ணத் தொடருக்கு முன்பாகச் சிறப்பான முறையில் தயாராக வேண்டும்

அணியின் தலைவர், பந்து வீச்சாளர்கள், துடுப்பாட்ட வீரர்கள் என்று பல பிரிவுகளில் கவனம் செலுத்துகிறேன். இதைச் சக வீரர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். அதேநேரம் தொடர்ந்து 11 சர்வதேசப் போட்டிகளில் தோல்வியடைந்து வந்துள்ளது தான் மிகவும் வருத்தம். இது ரசிகர்களுக்கும் பெரும் ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

இதனால் வீரர்களும் கவலையடைந்துள்ளனர். தற்போது நியூசிலாந்து அணி துயரமான [illegible]




யில் உள்ளது. இவ்வாறு விக்டோரி கூறினார்.

இதனிடையே, தோல்விக்கான காரணங்களை நியூசிலாந்து கிரிக்கெட் தீவிரமாக ஆய்வு செய்து வருகிறது. இது குறித்து தலைமை அதிகாரி ஜஸ்டின் வாகன் கூறுகையில்,

உலகக் கிண்ணக் கிரிக்கெட் ஆரம்பமாகவுள்ள நிலையில் விக்டோரியை அணித்தலைவர் பதவியிலிருந்து மாற்றும் எண்ணமில்லை. தோல்வி குறித்து அடுத்த சில நாட்களில் விக்டோரி, பயிற்சியாளர், அணி முகாமையாளர் ஆகியோரி[illegible]

# உலகக்கிண்ணக் கிரிக்கெட்; உத்தேச அணியில் ஜெயசூரியா



(கொழும்பு)

உலகக்கிண்ணத் தொடருக்கான உத்தேச இலங்கை அணியில் ஜெயசூரியா, வாஸ் உள்ளிட்ட மூத்த வீரர்கள் இடம்பெற்றுள்ளனர். இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் நாடுகள் இணைந்து அடுத்த ஆண்டு (பெப்ரவரி 19 ஆம் திகதி தொடக்கம் ஏப்பிரல் 02 ஆம் திகதி உலகக்கிண்ணக் கிரிக்கெட் (50 ஓவர்) தொடரை நடத்துகின்றன.

இத் தொடருக்கான 29 பேர் கொண்ட உத்தேச அணியை இலங்கை கிரிக்கெட்சபை நேற்று முன்தினம் அறிவித்தது. இதில் அனுபவ சனத் ஜெயசூரியா, சமிந்த வாஸ் உள்ளிட்டோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்துள்ள இவர்கள் இருவரும் நீண்ட நாட்களாக சர்வதேச ஒருநாள் போட்டிகளுக்கு தேர்வு செய்யப்படவில்லை.

இந்த அணியில் டெஸ்ட் அரங்கில் 800 விக்கெட் வீழ்த்தி உலக சாதனை படைத்துள்ள சுழல் பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரனும் இடம் பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 நாட்களுக்குள் தீர்வின்றேல் மீண்டும் பகிஷ்கரிப்பு

## தாதி உத்தியோகத்தர்கள்

(கொழும்பு)

சுகாதார அமைச்சு 3 நாட்களுக்குள் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்காவிட்டால் பிரதான வைத்தியசாலைகளில் தாதி உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடருமென்று அரசாங்கத் தாதி உத்தியோகத்தர் சங்கம் நேற்றுத் தெரிவித்தது.

இது தொடர்பில் அரசாங்க தாதி உத்தியோகத்தர் சங்கத்தின் செயலாளர் நாலக ஹெட்டியாராச்சி மேலும் தெரிவிக்கையில்,

அமைச்சினால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாதவிடத்து கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட தாதி உத்தியோகத்தர்களின் பணிப் பகிஷ்கரிப்பு தொடரும் என்றார்.

அம்பாந்தோட்டை மற்றும் களுபோவிலை வைத்தியசாலைகளிலிருந்து 34 தாதி உத்தியோகத்தர்களின் இடமாற்றத்தை உடனடியாக வாபஸ்பெற்றுக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தியே இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார்.

தொழிற்சங்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டதன் காரணமாகவே தமது சங்கத்திலிருந்து தாதி உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

தாதி உத்தியோகத்தர் சங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கமைய தாதி உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றத்தை வாபஸ் பெறுவதே ஒரே தீர்வு.ஆனால், இதற்கான சரியான தீர்வொன்று முன்வைக்கப்படாவிட்டால் மீண்டும் தாம் பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொள்வோம் என்றார் அவர். (ந-5)



வன்னிப் போரில் பங்காற்றிய படை வீரர்களைக் கௌரவிக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜகத் ஜயசூரியவுக்கு பதக்கம் அணிவித்து கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.

## விடுதலைப் புலிகளின்...

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையின் 1267ம் பிரகடனத்தின் அடிப்படையில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புக்கள், பயங்கரவாதிகள் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சொத்துக்களை முடக்குதல்,பயணக் கட்டுப்பாடு விதித்தல்,ஆயுதக் கொடுக்கல் வாங்கல்களைத் தடை செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமென இந்தப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ந-5)

## ஜனாதிபதிக்கு எதிரான ஆர்ப்பாட...

டெய்லி மிரர் ஊடகவியலாளர் ஒருவர் மின்னஞ்சல் ஊடாக எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயம் மேற்கண்ட பதிலை வழங்கியுள்ளது.

கேட்கப்பட்ட கேள்விகளும் பதில்களும் வருமாறு,

பிரிட்டனில் பயங்கரவாத இயக்கமெனத் தடை செய்யப்பட்ட இயக்கத்திற்கு பகிரங்கமாக ஆதரவு தெரிவிக்கும் சுமார் 400-500 தமிழர்களின் அழுத்தங்களுக்கு தேம்ஸ் வெல்லி பொலிஸார் பணிந்தது எப்படி?

பிரித்தானியப் பொலிஸார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு பொருத்தமான பாதுகாப்பு வழங்கியிருந்தனர்.அவரின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குள்ளானது என்ற கேள்வி ஒருபோதும் எழவில்லை.

மேற்படி தடை காகிதத்தில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதா?தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கத்தின் அங்கத்தவர்கள் இலங்கைக்கும் அதன் ஜனாதிபதிக்கும் எதிராக எல்.ரி.ரி.ஈயின் கொடிகளை ஏந்தியவாறு பகிரங்கமாகச் செயற்படுவது எப்படிச் சாத்தியமானது?

பிரிட்டனில் 2001 ஆம் ஆண்டு எல்.ரி.ரி.ஈ. அமைப்பு ஓர் பயங்கரவாத அமைப்பாகத் தடைசெய்யப்பட்டது. தடை செய்யப்பட்ட அமைப்பைச் சேர்ந்தவராக இருப்பது அல்லது ஆதரவளிப்பது இத்தடையின் மூலம் கிரிமினல் குற்றமாகிறது.

தடை செய்யப்பட்ட அமைப்பொன்றின் கூட்டமொன்றை தெரிந்து கொண்டே ஏற்பாடு செய்வது அல்லது அவ்வமைப்பின் ஆடைகளை அணிவது அவற்றின் பொருட்களைப் பகிரங்கமாகக் கொண்டு செல்வதும் கிரிமினல் குற்றமாகும்.

கிரிமினல் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்துவது பிரித்தானியப் பொலிஸாரின் பொறுப்பாகும்.பொலிஸாரின் செயற்பாட்டு விடயம் குறித்துப் பிரித்தானிய அரசாங்கம் கருத்துக் கூற இயலாது.

ஜனாதிபதி ஒபாமா பிரிட்டனுக்கு விஜயம் செய்யும் போது அல்குவைதா அல்லது தலிபான்கள் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தினால் பிரித்தானிய அரசாங்கமும் பிரித்தானியப் பொலிஸும் இதே போன்றே நடந்து கொள்ளுமா?

இல்லை

நட்புறவான பொதுநலவாய நாட்டின் தலைவர் ஒருவர் விஜயம் மேற்கொள்ளும் போது அது தனிப்பட்ட விஜயமாக இருப்பினும் அவருக்குப் போதுமான பாதுகாப்பு வழங்குவது பிரித்தானிய அரசாங்கத்தின் பொறுப்பில்லையா?

ஒக்ஸ்போட் யூனியன் 'நிகழ்ச்சியை திட்டமிடுவதிலோ அதை இரத்துச் செய்யும் தீர்மானத்திலோ பிரித்தானிய அரசாங்கம் சம்பந்தப்படவில்லை.பொது மக்கள் ஒழுங்கும் பாதுகாப்பு விவகாரமும் ஒக்ஸ்போட் யூனியன் மற்றும் பொலிஸார் தொடர்பானவையாகும்.

தடைக்கு மத்தியிலும் எல்.ரி.ரி.ஈ யினால் இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக பிரித்தானிய அரசாங்கமும் பிரித்தானிய சட்ட அமுலாக்கல் அமைப்புகளும் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் போகின்றன?

கிரிமினல் குற்றங்கள் குறித்து விசாரணை நடத்துவது பிரித்தானிய பொலிஸாரின் பொறுப்பாகும்.பொலிஸாரின் செயற்பாட்டு விடயம் குறித்து பிரித்தானிய அரசாங்கம் கருத்துக் கூற இயலாது.

பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டங்களை மீறும் இத்தகைய சம்பவம் எதிர்காலத்தில் நடைபெறாதிருப்பதற்கு என்ன நடவடிக்கை மேற்கொள்ள பிரித்தானிய அரசாங்கம் எதிர்பார்க்கிறது?

(பதில் இல்லை)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்தினால் ஏன் விசா மறுக்கப்பட்டது?

தனிப்பட்ட விசா விண்ணப்பங்கள் குறித்து மூன்றாம் தரப்புக்கு பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் கருத்துக் கூற முடியாது. (ந-5)

## மேலும் 500 ஆசிரியர்...

அண்மையில் வெளியிட்டது.

இந் நிலையில் 2011ஆம் ஆண்டுக்குரிய மாவட்டங்களுக்கு இடையிலான ஆசிரியர் இடமாற்றத்தையும் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி வழங்குவதற்கான ஏற்பாடுகளை வடக்கு மாகாண கல்வித் திணைக்களம் மேற்கொண்டுவருகின்றது. இது தொடர்பாக வடக்கு மாகாண கல்வித் திணைக்கள இடமாற்ற சபை கடந்த வாரம் கூடி ஆராய்ந்தது.

வன்னி கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் 500 ஆசிரியர்கள் யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களுக்கு இடமாற்றத்தை கோரியுள்ளனர்.

இந் நிலையில் யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களை வன்னி கல்வி வலயங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு மீள்நிரப்ப வேண்டிய கட்டாயத்தில் வடக்கு மாகாண கல்வி திணைக்களம் உள்ளது.

எனவே இது தொடர்பில் யாழ்.மாவட்ட கல்வி வலயங்களுடனும் வவுனியா கல்வி வலயங்களுடனும் விரைவில் ஆராய்ந்து மேற்குறித்தளவு ஆசிரியர்களை வன்னி வலயக் கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளுக்கு மீள் நிரப்புவதற்கு வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் திட்டமிட்டு வருகின்றது. (ந-5)

## விக்கிலீ...

வழங்கியுள்ளது.

ஜனவரி 11ஆம் திகதி அடுத்த விசாரணை நடைபெறும் வரை ஜூலியன் அசேஞ் பிணையில் செல்ல நீதிபதி ஹோவார்ட் ரிடில் அனுமதி வழங்கினார்.

அண்மைக் காலமாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் அதிரடியான தகவல்களை வெளியிட்டு சர்வதேசத்தை பெரும் பரபரப்பில் ஆழ்த்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ந-5)

## வன்னி...

அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இறுதிக்கட்டப் போரில் ஈடுபட்ட முப்படைகளையும் சேர்ந்த ஆயிரம் படைவீரர்களில், இராணுவத்தைச் சேர்ந்த 680 பேருக்கும், கடற்படையைச் சேர்ந்த 170 பேருக்கும், விமானப்படையைச் சேர்ந்த 85 பேருக்கும் மற்றும் பொலிஸ்துறையைச் சேர்ந்த 65 பேருக்கும் இவ்வாறு பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ந-5)

## அரசியல்...

தமது கட்சியின் சார்பில் பங்குபெறும் உபகுழு உறுப்பினர்களின் பெயர்களை கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

மொத்தமாக 6 பேர் கொண்ட இவ் உபகுழுவில் 3 பேர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்தும் 3 பேர் தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தின் சார்பிலும் நியமிக்க இணக்கம் காணப்பட்டிருந்தது. தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தின் சார்பில் இடம் பெறும் உறுப்பினர்கள் விபரம் வெளியிடப்படவில்லை. (ந-5)

STUDY IN UK
IELTS அவசியமில்லை
யாழ்.நகரில் மிகக்குறைந்த செலவில் உங்கள் கனவுகளை நனவாக்கிட உங்கள் நம்பிக்கையான நண்பன்.
❁ கல்லூரிக் கட்டணம் அதிகூடிய தொகை 2000 பவுண்ஸ் மட்டுமே
❁ சேவைக் கட்டணம் முற்றிலும் இலவசம்
❁ மிகக்குறைந்த செலவில் Sponsor வசதிகள்.
❁ பிரபலமான சட்டத்தரணிகளின் வழிகாட்டல் உதவியுடன்
❁ குடும்பமாகக் கல்வி பயிலக்கூடிய வாய்ப்புகள்
❁ லண்டனில் தரம் வாய்ந்த கல்லூரிகள்/பல்கலைக்கழகங்களில் அனுமதிகள்
❁ Visaவுக்கான 100% உத்தரவாதம்.
JANUARY ADMISSIONக்கான இறுதிவாய்ப்பு
தொடர்பு:0770871616
(3246)
Student Visa வுக்கான விதிமுறைகள் கடுமையாக்கப்படுவதற்கு முன்பாக இறுதி வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.
அலுவலக முகவரி
245,பலாலி வீதி,கந்தர்மடம்.
(Baby Photo அருகில்)
அலுவலக நேரங்கள்
திங்கள் - சனி வரை
காலை 9.00-பிற்பகல்3.30

திருமறைக் கலாமன்றம்
கலைத்தூது அழகியல் கல்லூரி
கண்டிய நடன பயிற்சி நிறைவும் சான்றிதழ் வழங்கும் வைபவமும்
காலம்: 15.12.2010 புதன்கிழமை(இன்று)
நேரம்: மாலை 5.00 மணி
இடம்: கலைத்தூது கலையகம்
286,பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(C-1828)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
- திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org